# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 28 | 12-03-2003 | புதன்கிழமை | ஓசை 22



தேவையை நிறைவு செய்து
நேரத்தை மீதுப்படுத்த
புடைவைத் தெரிவுக்கு
வவுனியா நகரில்...
SHANDHA TEX
பஜார் வீதி, வவுனியா.
T.P:24-22879 (சி-7649)


# வர்த்தகக் கப்பல் தாக்கப்பட்ட விடயத்தை தலைமைப் பீடம் பாரதூரமாகவே கருதுகிறது!


## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

**திருகோணமலைக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் எமது வணிகக் கப்பல் மீது சிறிலங்கா கடற்படை நடத்திய தாக்குதல் சம்பவத்தை பாரதூரமான சம்பவமாகவே எமது தலைமைப்பீடம் பார்க்கின்றது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நேற்று நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில், தகர்க்கப்பட்ட கப்பலைவிட அதில் உயிர்நீத்த போராளிகள் முக்கியமான போராளிகள் இவர்களின் மூன்று அல்லது நான்குபேர் லெப்.கேணல் தரத்தில் உள்ளனர். இவர்கள் கடல் துறையில் நீண்டகாலம் அனுபவம் பெற்ற போராளிகள். ஆகவே எமது தலைவர் அவர்கள் இவர்களது இழப்பு காரணமாக மிகவும் வேதனை அடைந்து இருக்கிறார்.

இப்படி தொடர்ச்சியாக நாம் உயிரிழப்புக்களை சந்திக்க முடியாது. ஏனென்றால் ஒரு சட்டவிரோத சம்பவத்துடன் நிகழ்ந்த ஒரு பிரச்சினையாக இருந்தால் இதனை பொறுத்துக் கொள்ளலாம்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



நீதிமன்ற கட்டடத்தை நாடாவைவெட்டி அரசியல் ஆலோசகர் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

## தமிழீழ நீதிமன்ற வளாகம் நேற்று அரசியல் ஆலோசகரால் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நீதிமன்ற வளாகம் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா அவர்களின் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து நீதிமன்ற பெயர்ப்பலகையினை தமிழீழ நிதித்துறைப்பொறுப்பாளர் தமிழ் குமரன் திரைநீக்கம் செய்து வைக்க, நீதிமன்ற அலுவலகப் பெயர்ப்பலகையினை விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் பால குமாரன் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் ~ சந்திரிகா நேற்றுச் சந்தித்துப் பேச்சு

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சந்தித்து நேற்று கலந்துரையாடியுள்ளனர்.

சனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் கடற்படை யினரால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப் பட்ட சம்பவம் குறித்து பிரதமர் ரணில் சனாதிபதிக்கு விளக்கி யுள்ளார்.

எந்தவொரு அவசர நிலையையும் எதிர்நோக்கக் கடற்படை உசாராக இருக்கிறது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சு, நாட்டின் தற்போதைய நிலைமை பற்றியும் பிரதமரும், சனாதிபதியும் விரிவாக ஆராய்ந்தனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. (23)

## எட்டு அம்சக்கோரிக்கைகளை முன் வைத்து ஆசிரியர் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்கில் உள்ள அனைத்து பாடசாலை ஆசிரியர்களும் எட்டு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் வட - கிழக்கில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் செயலிழந்திருந்தன. ஆசிரியர்கள் எவரும் பாடசாலைகளுக்குச் சமுக மளிக்காததால் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை.

அரசிடம் எட்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் ஆசிரியர் சங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இப்போராட்டம் நடத்தப் பட்டுள்ளது. கல்வி அமைச்சருக்கு கோரிக்கை மகஜரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் கப்பல் மீதான தாக்குதலை கண்டித்து வவுனியாவில் கதவடைப்பு

(வவுனியா)

சர்வதேச கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்த விடுதலை புலிகளின் வர்த்தக கப்பலை புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாகவும், சமாதானத்தை குழப்பும் நோக்குடனும் சிறிலங்கா கடற்படை வழிமறித்து தாக்கி அழித்த சம்பவத்தைக் கண்டித்து வவுனியாவில் பூரண கதவடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இந்த கதவடைப்புப் போராட்டம் நாளை இடம்பெறவுள்ளது. வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் இதற்கான ஏற்பாட்டை செய்துள் ளது.

வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டு பூரண கதவடைப்பு போராட்டம் நடத்தப் படவுள்ளது. (10)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் இன்று வன்னி வருகிறார்

(அலுவலக செய்தியாளர்)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அவர்களைச் சந்திக்கவுள்ளார்.

புலிகளின் கப்பல் ஒன்றை நேற்று முன்தினம் சிறிலங்கா கடற்படையினர் தாக்கி மூழ்கடித்த சம்பவம் குறித்தும் விடுதலைப் புலிகளின் தலைவர்களோடு இவர் விவாதிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## வீரவணக்கம்

நேற்று முன்தினம் சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். மேஜர் கந்தன் (தேவராசா வசிகரன்/வசி, புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம். த.மு. தேவிபுரம், புதுக்குடியிருப்பு) என்னும் போராளியே சாவடைந்தவராவார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் நின்றிருந்த இடம் குறித்த தகவலை கடற்படை முரணான வகையில் தெரிவித்தது

### - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர்

கப்பல் தரித்திருந்த இடம் குறித்த தகவலை கடற்படை முன்னுக்குப்பின் முரணான வகையில் தந்துகொண்டிருந்தது என போர்நிறுத்தக் கண்காணிப்புக குழுத் தலைவர் ரெலிவ்சன் தெரிவித்தார்.

பி.பி.ஸிக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் சிறிலங்காக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுடன் பேச்சு நடத்தினேன்.

கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து எவ்வளவு தகவல்களைப் பெறமுடியுமோ அவ்வளவுக்கு பெற்றுக்கொள்ளவும் எந்த இடத்தில் சரியாக இந்த சம்பவம் நடந்தது என்பதை அறியவும் முயன்றேன்.

எமது சட்ட ஆலோசகர்கள் பன்னாட்டுக் கடல் போக்குவரத்துச் சட்டங்கள் மற்றும் மரபுகளை ஆராய்ந்து இந்தச்சட்டத்தின் கீழ் புலிகளின் கப்பல் இருந்த இடத்திற்குச் சென்று மறித்த கடற்படைக்கு மறிக்க உரிமை உண்டா என்பது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

கடற்படை முதலில் எமக்குத் தகவல் தருகையில்; இந்தச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், வைத்தியக் கோவை அறிமுக அட்டையும் 08.03.2003 அன்று கிளிநொச்சிக்கும் - புளியம் பொக்கணை சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத் தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

(3010)


## வெளியீட்டு நிகழ்வு

தீபா குமரேசின் 'புரிதல்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு ஸ்ரீ. சுப்பிரமணியம் வித்தியா சாலையில் இந்த வெளியீட்டு நிகழ்வு மாலை 3.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

# பீரிஸ், எஸ்.பீ. திஸாநாயக்க ஐ.தே.க. உறுப்புரிமை பெறத் தடை

(கொழும்பு)

அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், எஸ்.பி. திஸாநாயக்க உள்ளிட்ட எட்டுப் பேர் ஐ.தே.கட்சியின் உறுப் புரிமையைப் பெற்றுக்கொள் வதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்துள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எதிரி வீர பிரேமரத்ன தாக்கல் செய்த முறைப்பாட்டை பரிசீலனை செய்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள் ளது.

அமைச்சர்கள் ஜீ.எல். பீரிஸ், எஸ்.பி. திசாநாயக்க , மகிந்த விஜயசேகர, பந்துல குணவர்த்தன, திலங்க சுமதிபால, ஆனந்த முனசிங்க, ஜயசுந்தர விஜயக்கோன், பந்துல பராக்கிரம குணவர்த்தன ஆகியோருக்கே ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெறுவதற்கு நீதிமன்று தடை யுத்தரவை பிறப்பித்துள்ளது.

இவர்கள் 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி பரஸ்பர புரிந்துணர்வு உடன் படிக்கை ஒன்றை ஏற்படுத்தி யிருந்தனர். இந்த உடன் படிக்கையை இந்த உறுப் பினர்கள் மீறியுள்ளனர். இதனால் ஐ.தே.கட்சி அங்கத்துவத்தைப் பெறுவதை தடை செய்ய வேண்டும் என மனுதாரர் கேட்டிருந்தார்.

இதேவேளை, இவ் வழக்கு தொடர்பாக மற்றுமொரு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த எட்டுப் பேருக்கும் ஐ.தே.க. கட்சி உறுப்புரிமையை பிரதமர் ரணில் வழங்குவதைத் தடுக்கும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர் மலிக் சமரவிக்கிர பொதுச் செயலாளர் கப்புக் கொட்டுவ மற்றும் அதிகாரிகள், பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளார்கள்.

# திலீபன் மருத்துவ சேவையினால் 13829 பேருக்குச் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப் புலிகள் மருத்துவப் பிரிவு, தமிழீழ சுகாதார சேவைகளின் தியாக தீபம் திலீபன் - மருத்துவ சேவையினரால் கடந்த மாசி மாதம் மாங்குளம், ஐயன் குளம், நைனாமடு, அளம்பில், கற்சிலைமடு, ஆழியவளை, கறுக்காய்க்குளம், பூநகரி, நெடுந்தீவு ஆகிய ஒன்பது நிலையங்களில் 13829 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப் பட்டுள்ளது.

இதில் வைரஸ் காய்ச்சல் - 2087, சுவாசப்பாதைத் தொற்று - 2817, மலேரியாக்காய்ச்சல் - 835, குடற்புழுத்தொற்று - 1276, குருதிச்சோகை - 193, தோல் நோய்கள் - 596, காயங்கள் - 779, பாம்புக்கடி, - 23, நாய்க்கடி - 49, நெருப்புக்காய்ச்சல் - 02 ஆகிய நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தியாகதீபம் திலீபன் நடமாடும் மருத்துவ சேவையினரால் 3996 நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ).

## - ஊவா மாகாணத்தில் -

# 242 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க அனுமதி

ஊவா மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு முதற்கட்டமாக 242 தமிழ் ஆசிரியர்களை நியமிக்க அரசாங்க திறைசேரி அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஊவா மாகாண சபை அமைச்சர் சச்சிதானந்தன் தெரிவித்தார்.

ஊவா மாகாணத்திலுள்ள 193 பாடசாலைகளில் 730 ஆசிரியர் களுக்கு நீண்டகாலமாக பற்றாக்குறை நிலவுவதாக புகார் செய்யப்பட்டு வந்தது.

இவ் விவகாரம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து இவர் இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசியுள்ளார்.

பிரதமரின் பணிப்பின் பேரில் திறைசேரி 242 ஆசிரியர்களை நியமிக்க அனுமதி வழங்கியுள் ளது.

இவர்களில் 121 பேர் ஏப்ரல் மாதம் முதல் நியமனம் பெறுவர். மீதமுள்ள 121 பேரும் இரண்டொரு மாதங்களுக் கிடையில் நியமனம் பெறுவர். இந்த 242 ஆசிரியர்களும் தமிழ் ஆசிரியர் கள் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## - முள்ளியான், ஆழியவளை -

# தபாலகங்களைத் திறக்க மக்கள் கோரிக்கை

மருதங்கேணிப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்து 10 மாதங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் முள்ளியான், ஆழியவளை உப தபாலகங்கள் இன்னமும் திறக்கப்படாததால் மக்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனால் முள்ளியான், வெற்றிலைக்கேணி, கட்டைக் காடு ஆகிய பிரதேசங்களில் உள்ள மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் பலமைல் தூரம் நடந்து தாளையடி உப தபாலகத்திற்குச் செல்ல வேண்டிய பரிதாபநிலை உள்ளது.

இப்பகுதியில் உள்ள பொது மக்களினதும், பாடசாலைகளுக்குமுரிய கடிதங்கள் தாளையடி உபதபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் உபதபாலகங்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோதும் இதுவரை உருப்படியான நடவடிக்கை ஏதும் எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை எனப் பொது அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

# வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் இரண்டாயிரம் விதவைகள்

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் சுமார் இரண்டாயிரம் விதவைகளும், இருநூற்று இருபது ஊனமுற்றோரும் வாழ்வதாக தெரிவிக்கப் படுகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட ஆய்வின்போது இது தெரியவந்துள்ளது.

# கசிப்பு விற்பனையாளர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டார்

(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு காவல் பணிமனையினர் புதுக்குடியிருப்பு, நெடுங்கேணிப் பகுதிகளில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்ட காவல்துறையினர் புதுக்குடியிருப்புப் பகுதியில் கசிப்புடன் நபர் ஒருவரை கைது செய்து புதுக்குடியிருப்பு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

அதேபோன்று கடந்த வாரம் நெடுங்கேணிப் பகுதியில் தீவிர வேட்டையில் இறங்கிய காவல்துறையினர் கஞ்சா போதைப்பொருட்களுடன் மூன்று நபர்களை கைதுசெய்து புதுக்குடியிருப்பு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (சோ)

# பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் விபத்து

பேராதனைப் பல்கலைக்கழக இரசாயன ஆய்வுகூடத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் 06 பல்கலைக்கழக ஊழியர்கள் காயங்களுக்குள்ளாகி பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ஆய்வுகூடத்தில் இருந்த வாயுக்குழாய் ஒன்று வெடித்தமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

எனினும் இந்த திடீர் விபத்தில் சந்தேகம் ஏற்பட்டதனால் ஆய்வுகூடத்தை பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவு அவசரமாக மூடிச் சீல் வைத்துள்ளது.

## அவசர கலந்துரையாடல்

முல்லை வலய தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை புதுக்குடியிருப்பு றோ.க. பாடசாலையில் பி.ப 1.00 மணியளவில் நடைபெறவிருப்பதனால் முல்லை வலய அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

## உலக உணவுத்திட்டத்தின் கீழ் சுதந்திரபுரம் – இருட்டுமடு வீதி புனரமைப்பு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு சுதந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சுதந்திரபுரம் - இருட்டுமடுவை இணைக்கும் வீதி நீண்ட காலமாக போக்குவரவிற்கு இடையூறாக அமைத்திருந்தது. தற்போது உலக உணவுத் திட்டத்தின் கீழ் இவ் வீதி அகலமாக்கப்பட்டு புனரமைப்பு செய்வதற்கான ஆரம்ப வைபவம் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு சுதந்திரபுரம் கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்றது. இவ் வைபவத்தில் முந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து சிறப்பித்தனர். 19

# பேராளர் சங்கமம்

புதுக்குடியிருப்பு கோட்டத்தில் தேசிய எழுச்சிப் பேரவை பேராளர்களுக்கான மாதாந்த சங்கம நிகழ்வு நாளை காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வானது புதுக்குடியிருப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறுமென புதுக்குடியிருப்பு கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இபிறையாளன் தெரிவித்தார். (19)


## சகல உறுப்பினர்களுக்கும், பூநகரி ப.நோ.கூ.சங்கம்

### வாக்காளர் இடாப்பு முடிவுறுத்தல்

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2003ஆம் வருடம் நடைபெறவுள்ள கிளைக்குழு தேர்தலை முன்னிட்டு சகல கிளைகளிலும் உறுப்பினர் பதிவேடு 31.03.2003 உடன் முடிவுறுத்தி, தேர்தலுக்கான ஏற்பாடு செய்ய வேண்டியிருப்பதால் சங்கத்தின் துணை விதிக்கமைய உறுப்பினராக சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தி செய்த ரூபா. 100/- கொண்ட முழுப் பங்குப்பணத் தொகையைக் கொண்ட உறுப்பினரே வாக்களிக்க உரித்துடையவராவார். எனவே இச்சந்தர்ப்பத்தை தவறவிடாது ரூபா. 100/- கொண்ட ஒரு முழுப் பங்குத் தொகையை இதுவரை பூர்த்தி செய்யாத உறுப்பினர்கள் தமது கிளைகள் மூலம் உறுப்பினர் பதிவேட்டை பார்வையிட்டு மிகுதிப் பணத்தை 31.03.2003 க்கு முன் செலுத்தி நிர்வாகத்தில் பங்கு கொள்ள/வாக்களிக்கக் கூடிய உரிமையினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இது தொடர்பிலான மேலதிக விளக்கங்கள் தேவைப்படின் அலுவலகத்தில் பொதுச் செயலாளருடன் தொடர்புகொண்டு சந்தேகங்களை நீக்கிக் கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்,
கூட்டுறவுச் சேவையிலுள்ள,
தா. அரியரத்தினம்.
பொதுச்செயலாளர்,பூநகரி
ப.நோ.கூ. சங்கம்.

(சி-8011)



உ
சிவமயம்

## கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல்தின தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்

மேற்படி ஆலய பொங்கல் விழா 18-03-2003 செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது என்பதை அறியத்தந்து பொங்கல் நேர்த்திப் பொருட்கள் தண்டல், எதிர்வரும் 12-03-2003 புதன் தொடக்கம் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகர், விசுவமடு, பிரமந்தனாறு, புன்னைநீராவி, உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலய சின்னம் பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுடன் உழவு இயந்திரங்களில் தொண்டர்கள் வருகை தரவுள்ளனர் என்பதை நேர்த்திப் பொருள் கொடுக்கும் அடியவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**ஆலய பரிபாலனசபை**

(சி-8004)

# அமெரிக்காவின் தன்னிச்சையான போக்கு ஐ.நா. சட்ட விதிகளை மீறுகின்ற செயல்

## – பொதுச் செயலாளர் கொபி அனான் கண்டனம்

**அமெரிக்காவின் தன்னிச்சையான போக்கு குறித்து ஐ.நா. தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. ஈராக் விவகாரத்தில் ஐ.நா. சட்ட விதிகளுக்குப் புறம்பாக நடந்து விடக்கூடாது என அது அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளதுடன், அவ்வாறு நடந்து கொள்ளும் பட்சத்தில் அது ஐ.நா.வின் அதிகாரத்தை கேள்விக் குறியாக மாற்றிவிடும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையின் ஒத்துழைப்பின்றி ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்குமேயானால் அது பேரவையின் சட்ட விதிகளுக்கு புறம்பான செயலாக அமைவதுடன், சாசனத்தை மீறும் செயலாக அமையும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் எச்சரித்துள்ளார்.

ஈராக் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய நகல் தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னர் உறுப்பு நாடுகள் ஐக்கியப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் பாதுகாப்புப் பேரவையை புறந்தள்ளிவிட்டு அமெரிக்காவும் மற்றைய நாடுகளும் போரில் ஈடுபட்டால் அந்தப் பேரவையின் அதிகாரத்தை கேள்விக் குறியாக்கிவிடும் எனவும் கொபி அனான் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை புதிய தீர்மானத்துக்கு அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின், பல்கேரிய நாடுகள் ஆதரவு தெரிவித்துவரும் நிலையில் ஜப்பான், ரஷ்யா, பிரான்ஸ், சீனா, ஜேர்மனி, சிரியா என்பன கடும் எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## சவுதி மறுப்பு

ஈராக்கைத் தாக்குவதற்கு தளமாகப் பாவிக்கும் விதத்தில் விமான நிலையமொன்றை அமெரிக்காவுக்கு வழங்கியிருப்பதாக வெளிவந்த செய்திகளை சவுதி அரேபியா மறுத்துள்ளது. யுத்தமொன்று ஏற்படுமானால் சவுதி வான் பரப்பை பாதிக்கும் வகையில் அமெரிக்கா ஒப்பந்தம் செய்திருப்பதாக 'வொஷிங்டன் போஸ்ட்' தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.



குவைத்தின் அலி அல்சலாம் விமானப் படைத்தளத்தில் தரையிறங்கும் அமெரிக்க 'கோப்ரா' தாக்குதல் உலங்குவானூர்திகள்.

# சமாதானத்தால் எட்டப்பட்ட நன்மைகளை சிதறடிக்க சனாதிபதி ஆதரவாளர் முயற்சி

(அபிட்ஜான்)

ஐவரிக்கோஸ்டில் சமாதான உடன்படிக்கைக்கு எதிராகப் பரவலான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

தேசப்பற்று மிக்க இளைஞர்கள் என்ற அமைப்பு தமமுடன் இணையுமாறு ஏனையவர்களையும் கேட்டு வருகின்றது. சனாதிபதி லோறன்ஸ் பாக்வோவுக்கு சார்பான கடும் போக்குவாதிகளே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

சனாதிபதியைப் பதவி கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட சதிப்புரட்சி தோல்வி அடைந்த பின்னர் ஏற்பட்ட பிளவுகள் நாட்டை ஒரு போர்க்களமாக மாற்றியுள்ளது. சமரச முயற்சியாகப் பிரான்ஸ் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

இதன்படி கிளர்ச்சிக் குழுக்களுக்கும் அமைச்சு பதவி உட்பட பல சலுகைகள் கிடைக்கவுள்ள நிலையில் அதனை குழப்பும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன.



ரமள்ளா நகரில் இடம்பெற்ற பலஸ்தீன அதிகார சபைக் கூட்டத்தில் சனாதிபதி அரபாத்துடன் பிரதமராக பிரேரிக்கப்பட்டுள்ள அப்பாஸும் (இடது) காணப்படுகிறார்.

# சிம்பாப்வே சனாதிபதி, அதிகாரிகள் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிப்பு

(வாஷிங்டன்)

தென்னாபிரிக்க நாடான சிம்பாப்வேயில் சனநாயகத்தை நசுக்குவதாகக் கூறி அந்நாட்டின் சனாதிபதி றோபேட் முகாபே மீதும், மற்றும் 76 உயர் அரசாங்க அதிகாரிகள் மீதும் அமெரிக்க சனாதிபதி புஷ் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வழிகாட்டுதல்களை அடுத்து சனாதிபதி முகாபே மற்றும் உயர் அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் சொத்துக்களை முடக்கி வைப்பதற்கு அமெரிக்கப் பிரஜைகளோ நிறுவனங்களோ இவர்களுடன் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களை தடைசெய்வதற்குமான உயர் ஆணையை சனாதிபதி புஷ் பிறப்பித்துள்ளார். இத்தடைகள் யாவும் உடனடியாக அமுலுக்கு வரும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

கடந்த 02 வருடங்களுக்கு மேலாக சிம்பாப்வே அரசு அந்நாட்டின் சனநாயக அமைப்புக்களைப் படிப்படியாக அலட்சியம் செய்தும், வன்செயல், அச்சுறுத்தல், அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகள் போன்றவற்றைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது என அவர் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

முகாபே கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலில் மோசடிகளைச் செய்தார் எனவும் அரசியல் எதிரிகளைத் துன்புறுத்தினார் எனவும், வெள்ளை இனத்தவர்களுக்குச் சொந்தமான பண்ணைகளைக் கைப்பற்றி காணியற்ற கறுப்பு இனத்தவர்களுக்கு வழங்கினார் எனவும் மேற்குநாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இதனையடுத்து மனித உரிமை அமைப்புகளின் வேண்டுகையின் பேரில் அமெரிக்காவும் பொதுநலவாய அமைப்பும் ஐரோப்பிய ஒன்றியமும் சிம்பாப்வே மீது பிரயாணத் தடைகளையும் பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன.

## 58 வயதில் இரட்டையரை பிரசவித்த அன்னை

58 வயதான இஸ்ரேலியப் பெண்மணி ஒருவர் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

இஸ்ரேல் சரித்திரத்தில் ஆகக் கூடிய வயதில் இரட்டைக்குழந்தைகளைப் பெற்ற பெண்ணாக இவர் கருதப்படுகின்றார்.

இந்தப் பிரசவத்தின் மூலம் தனது நாட்டிற்கு கீர்த்தியை பெற்றுக் கொடுத்துள்ளதாக அவர் ஊடகங்களுக்குக் கூறியுள்ளார்.

ஆகக் கூடுதலான வயதில் குழந்தைகளைப் பெற்றெடுத்தவர் என்ற கின்னஸ் சாதனையை 1994ஆம் ஆண்டு இத்தாலியைச் சேர்ந்த 63 வயது பெண்ணொருவர் நிலை நாட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் பிரச்சாரங்களில் முதலமைச்சர் ஈடுபடத்தடை!

## – ஆணையகம் ஆலோசிக்கிறது

(புதுடில்லி)

இடைத்தேர்தல் நடைபெறும் வேளைகளில் முதலமைச்சர்கள், அமைச்சர்கள் பிரச்சாரங்களில் ஈடுபடுவதைத் தடைசெய்ய இந்தியத் தேர்தல் ஆணையகம் ஆலோசித்து வருகிறது.

தேர்தல் ஆணையாளர் லிங்டோ இதனை புதுடில்லியில் அறிவித்தார்.


சாத்தான்குளம் இடைத் தேர்தலில் முதலமைச்சர் ஜெய லலிதா வழங்கிய வாக்குறுதிகள் தேர்தல் விதிமுறைகளை மீறிய செயலாகும். இது குறித்து கடும் கண்டனம் தெரிவித்த போதிலும் ஜெயலலிதா எந்தப் பதிலையும் தெரிவிக்கவில்லை.

நாம் நாகரிகமான உலகில் வாழ்கின்றோம். கொஞ்சம் கௌரவமான அரசியல் வாதிகளுடன் பழகுகிறோம். இந்த திறந்த சமுதாயத்தில் வாழும் மக்கள் அவர்கள் செய்த தவறுக்காக வெட்கப்படாவிட்டால் நாம்(தேர்தல்ஆணையகம்) என்ன செய்ய முடியும். ஆனாலும் இது போன்றவர்கள் வருங்காலத்தில் கண்டனத்துக்கு ஆளாவார்கள். மக்களுக்கு பதில் சொல்ல வேண்டிய காலகட்டம் வரும் என்று மேலும் கூறினார்.



டாங்கியொன்றினைப் பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இஸ்ரேலியப் படையினர்.

# தமிழீழ நீதிமன்ற வளாகத் திறப்பு விழா



பொதுச்சுடரை அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றுகிறார்





தேசியக் கொடியை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தும் காவல்துறைப் பொறுப்பாளர்.



தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தும் பரா அவர்களும், நீதியாளர்களும்.




நீதிமன்ற வளாகப் பெயர்ப் பலகையை நிதித்துறைப் பொறுப்பாளர் திரைநீக்கம் செய்கிறார்.




நீதி மன்றப் பெயர்ப் பலகையை பாலகுமாரன் திரைநீக்கம் செய்கிறார்.



நீதிமன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்து உள்நுழையும் அரசியல் ஆலோசகர்.





விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.

## பெரும் ஆத்திரமூட்டும் செயல்களின் மத்தியிலும்

# எமது மக்கள் விரும்பும் அமைதிக்காக மிகவும் பொறுமையுடன் இருக்கின்றோம்!

## தமிழீழ நீதிமன்ற வளாகத் திறப்பு விழாவில்

## அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஆற்றிய உரை

எனது அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே! வணக்கம்.

இன்றைய இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தமிழீழ மண்ணுக்கு வருகை தந்து உங்களை நேரில் சந்தித்து இன்றைய அரசியல் நிலைமை பற்றியும் பேச்சுவார்த்தைகள் பற்றியும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியும் இந்த நிகழ்வில் உங்களுக்கு எடுத்து விளக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய அரசியல் நிலைமை பற்றியும் இந்த பேச்சுவார்த்தைகள் எந்த திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்பது பற்றியும் உங்களுக்கு எடுத்து விளக்குவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த ஓராண்டுக்கும் மேலாக போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து, ஆறு மாதங்களாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஐந்து சுற்றுப் பேச்சுக்களில் எத்தகைய முன்னேற்றம் காணப்படுகின்றது? என்பது பற்றியும் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நேற்று திருகோணமலையில் இருந்து இருநூற்று இருபது கடல் மைல்கள் தொலைவில் அதாவது, சர்வதேச கடற்பரப்பில் ஒரு துயரமான சம்பவம் நிகழ்ந்த விடயத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

கடந்த ஓர் ஆண்டு போர் நிறுத்தத்தில் மிகவும் மோசமான போர் நிறுத்த மீறலாக இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. இந்தச் சம்பவம் குறித்து எமது இயக்க தலைமை மிகுந்த ஆழமான கவலையும், அதிர்ச்சியும் வெளியிட்டிருப்பதுடன் அரசாங்கத்துக்கு எமது ஆழமான அதிருப்தியை தெரிவித்திருக்கிறோம்.

இந்த நிகழ்வு இன்றைய சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசாங்கத்தை எச்சரிக்கை செய்திருக்கிறது.

ஆகவே இந்த நிகழ்வு பற்றியும் இதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் பற்றியும் உங்களுக்கு எடுத்துக் கூறவிரும்புகிறேன்.

உங்களுக்குத் தெரியும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு வர்த்தகக் கப்பல் சேவையை நடத்தி வருகிறது. கடந்த பதினைந்து ஆண்டுகளாக தென்னாசியாவில், தென்கிழக்காசியாவில் எமது கப்பல் போக்குவரத்துக்கள், வர்த்தக சேவைகள் நடைபெற்று வருகின்றன. இது ஒரு இரகசியமான விடயம் அல்ல. வர்த்தக நோக்கத்திற்காக நாம் நீண்டகாலமாகவே ஒரு கப்பல் சேவையை நடத்தி வருகின்றோம். கப்பல் நிறுவனங்கள் எமக்கு சொந்தமாக உள்ளன. பல கப்பல்கள் இப்பொழுதும் சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன.

இப்படியான ஒரு வர்த்தக கப்பல் அதாவது, இருநூற்று இருபது கடல் மைல் தொலைவில் சர்வதேச கடற்பரப்பில் தடுத்து நிறுத்தப்பட்டது.

அப்பொழுது எங்களுக்கு தகவல்கள் அறிவிக்கப்பட்டன. எமது கப்பலை நிறுத்தி அதில் கடற்படையினர் ஏறிப்பார்த்துப் பரிசோதனை செய்ய கோருவதாகவும் அந்தக் கப்பலை திருப்பி சிறிலங்கா கடற்பிரதேசத்துக்கு கொண்டு செல்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் எமக்குத் தகவல் தரப்பட்டது.

அப்போது தலைவர் பிரபாகரன் அவர்கள் என்னிடம் வந்து இலங்கை அரசாங்கத்துடனும், போர் நிறுத்த கண்காணிப்பு குழுவுடனும் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினையை உடனடியாக தீர்க்கும் படி கேட்டுக்கொண்டார். ஏனென்று சொன்னால் எந்த விதத்திலும் நாம் ஒரு சட்ட விரோதமான வேலையில் ஈடுபடவில்லை. எமது வர்த்தகக் கப்பல் அதாவது சட்ட பூர்வமாக பதிவு செய்யப்பட்ட எமது வர்த்தகக் கப்பல், சர்வதேச கடற்பரப்பில் சென்று கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு சிறிலங்கா கடற்படைக்கு எவ்விதமான சட்ட பூர்வமான அதிகாரமும் இல்லை,இதனை உடனடியாக அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

இதன்பிரகாரம் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் ஜெனரல் ரெலிவ் சனுடன் தொடர்பு கொண்டு நான் கதைத்தேன். ஏற்கனவே அவருக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதாவது சிறிலங்கா கடற்படைத்தளபதி கொடுத்திருக்கிறார்.



புலிகளின் கப்பல் ஒன்றை இருநூற்று இருபது கடல் மைல்களுக்கு அப்பால் நாங்கள் தடுத்து விசாரணை செய்து கொண்டிருக்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்பொழுது கண்காணிப்பு குழுத் தலைவரிடம் நான் சொன்னேன் இது ஒரு சர்வதேசக் கடற்பரப்பு. இதில் எந்தக் கப்பலுக்கும் சுதந்திரமாக நடமாடும் உரிமை உண்டு. ஆகவே இலங்கைக் கடற்படை இதில் தலையிடுவது சட்டவிரோதமானது என்று அவரிடம் சொன்னேன். அவரும் எமது நியாயப்பாட்டை ஏற்றுக்கொண்டார். அவர் சொன்னார், நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சத்தேவையில்லை. நான் இலங்கை கடற்படைத் தளபதியுடனும், இலங்கை அரசாங்கத்துடனும் தொடர்புகொண்டு இந்தத் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைக்கின்றேன் என்று எனக்கு வாக்குறுதி தந்தார். அப்பொழுது நான் இதைப் பிரபாகரனிடம் சொன்னேன்.

பிரச்சினை வராது, பிரச்சினை வராது பார்த்துக் கொள்வதாக இந்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் உறுதி மொழி தருகின்றார் என்று.

அதற்குள் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என நானும், பிரபாகரன் அவர்களும் தமிழ்ச் செல்வன் அவர்களும் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் ஒரு மணித்தியாலத்தின் பின் எங்களுக்கு விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தலைமைப்பீடத்தில் இருந்து ஒரு தகவல் வந்தது. அதாவது, எமது கப்பல் மீது சிறிலங்கா போர்க்கப்பல் தாக்குதலை நடத்தியதாகவும் எமது கப்பல் நடுச் சமுத்திரத்தில் பற்றி எரிவதாகவும் எமது போராளிகள் செத்து மடிந்து கொண்டிருப்பதாகவும் எமக்குத் தகவல் வந்தது.ஒரு சிறுநேரத்தில் கப்பல் தீப்பற்றி எரிந்து மூழ்கிவிட்டது.எமது போராளிகள் 11 பேர் இறந்து போனார்கள்.

இதன் பின்பு நாங்கள் கண்காணிப்புக் குழுத் தலைவருடன் தொடர்பு கொள்ளவில்லை. நாங்கள் இந்தச் சம்பவத்தைக் கடுமையாக ஆட்சேபித்து ஒரு அறிக்கை விட்டிருந்தோம்.

அந்த அறிக்கையில் இந்தச் சம்பவம் சட்ட விரோதமானது. போர் நிறுத்த நியமங்களை மீறுவதாக அமைந்திருக்கிறது. இந்தச் சம்பவம் எமது சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என நாம் அந்த அறிக்கையில் தெரிவித்தோம்.

இது சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்வு. உங்களுக்குத் தெரியும் கடந்த ஒரு வருடமாக எத்தனையோ சவால்கள் மத்தியில், எத்தனையோ முட்டுக்கட்டைகள் மத்தியில், எத்தனையோ ஆத்திரமூட்டும் செயல்கள் மத்தியில் நாம் பொறுமையுடன் நிதானம் இழக்காமல் இந்த போர் நிறுத்தத்தை பேணிவருகிறோம் என்று அமைதியைக் காத்து வருகிறோம் என்ற யதார்த்த உண்மையை நீங்கள் அறிவீர்கள்.

விடுதலைப்புலிகள் இயக்கம் காலம் காலமாகப் போர் நிறுத்தம் பேச்சுவார்த்தைகள் என்று இறங்கிய போதெல்லாம் சிறிலங்கா அரசும், உலகமும் எம்மை அதாவது இந்த பேச்சுவார்த்தைகளை புலிகள் குழப்புகின்றார்கள். புலிகளுக்கு அமைதி சூழ்நிலையில் நம்பிக்கையில்லை. போர் நிறுத்தத்தில் நம்பிக்கை இல்லை. இவர்கள் அமைதிவழி பேணி தமிழரின் தேசிய பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதில் உண்மையான பற்றுறுதி இல்லை. என்றெல்லாம் காலம் காலமாக எம் மீது குற்றம் சாட்டப்பட்டுவந்தது.

ஆனால் இன்று நாங்கள் உலகத் திற்கும் குறிப்பாக சிங்கள தேசத்திற்கும்- நாங்கள் சமாதானத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். நாம் உண்மையில் சமா தான வழி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறோம். என்பதை எடுத்துக் காட்ட வேண்டும் என்பதில் கடந்த ஒரு ஆண்டாக மிகவும் உறுதியாக,மிகவும் நிதானமாக செயற்பட்டு வந்திருக்கிறோம்.

உங்களுக்குத் தெரியும் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. சமீப காலமாக இராணுவம் குறிப்பாக கடற்படையினர் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.

அம்பாறையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தில் ஒன்பது பொது மக்கள் கொல்லப்பட்டார்கள். அப்பொழுதும் நாம் அமைதியைக் காத்தோம். நெடுந்தீவுக் கடற் பரப்பில் எமது மின்பிடிப்படகு தாக்கி அழிக்கப்பட்டு அதில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள்.

அதன் பின்பு மாணிப்பாயில் எமது பெண் போராளிகள் மிகவும் மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டார்கள். அப்பொழுதும் நாம் பொறுமையாக அமைதியைப் பேணினோம். இப்பொழுதும் நேற்றும் பதினொரு போராளிகள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அப்பொழுதும் நாம் அமைதியாக இருக்கின்றோம்.

இந்த சம்பவத்தை வைத்துக்கொண்டு நாங்கள் போருக்குப் போகத் தயாராக இல்லை. பொறுமையாக இருக்கின்றோம். எந்தளவுக்கெந்தளவு பொறுமையைக் காக்க முடியுமோ அந்தளவுக்கந்தளவு பொறுமையைக் காப்போம்.

ஆனால், எமது பக்கம் நியாயம் உண்டு என்பதை உலகுக்கு உணர்த்த நாங்கள் முயற்சிப்போம்.

விடுதலைப் புலிகள் ஆயுதத்தை கடத்த முனைகின்றார்கள் என்றொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்கின்றது. போர் நிறுத்த உடன்பாட்டின்படி இரு தரப்பும் இராணுவ சம நிலையைப்பேண வேண்டும் என்று கண்காணிப்புக் குழுத் தலைவர் சொல்கின்றார்.

இராணுவச் சம நிலை எப்படிப் பேணப்படுகின்றது. நாங்கள் ஆயுதங்கள் இறக்க முடியாது. நாங்கள் ஆயுதத்துடன் நடமாட முடியாது. ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு ஆயுதங்களைக் கொண்டு போக முடியாது. கடலில் சுதந்திரமாக நடமாட முடியாது.

ஆனால், சிறிலங்கா அரசின் பாதுகாப்பு செலவினம் குறைக்கப்படவில்லை. ஒரு சிறிய அளவே பாதுகாப்பு செலவினம் குறைக்கப்பட்டுள்ளது.

ஐயாயிரம் கோடி ரூபா, ஆயுதக் கொள்வனவுக்கு செலவளிக்கப்படுகின்றது. (ஐநூறு மில்லியன் டொலர்) அப்படியானால் என்ன நடக்கின்றது.

கடந்த ஒரு வருட காலமாக சிறிலங்கா இராணுவம் நவீன மயப்படுத்தப்பட்டு வருகிறது புதிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறார்கள். புதிய பீரங்கிப்படகுகளைக் கொள்வனவு செய்கிறர்கள். புதிய விமானங்களைக் கொள்வனவு செய்கிறார்கள்.

அவர்களுக்கு அமெரிக்காவில் பயிற்சி, இஸ்ரேலில் பயிற்சி, பாகிஸ்தானில் பயிற்சி, இந்தியாவில் பயிற்சி நடக்கிறது. சிறிலங்கா இராணுவம் நவீன மயப்பட்டு வருகிறது, பலப்பட்டு வருகிறது. இராணுவ இயந்திரம் பலப்பட்டுவருகிறது.

நாங்கள் என்ன செய்தோம். நெடுந்தீவில் பிடிபட்டது ஒரு 23 எம்.எம் தான் இதைப்போல எங்களிடம் நூற்றுக் கணக்கான ஆயுதங்கள் இருக்கின்றன. இந்த ஒரு 23 எம்.எம் துப்பாக்கியையும், மூன்று எறி குண்டையும் வைத்துக் கொண்டு நாங்கள் ஆயுதங்களைப் பெருமளவில் கடத்துகிறோம் என்று சிறிலங்கா பத்திரிகை உலகம் எம்மீது குற்றம் சாட்டுகிறது.

இது ஒரு வர்த்தகக் கப்பல் அது எங்கேயோ போகிறது. அதைப் போய்த் தடுக்கின்றார்கள். உனக்குப் பின்னணியில் யார் இருந்து இத்தகவல்களை கொடுக்கின்றார்கள் என்றும் எங்களுக்குத் தெரியும். நீ தடுத்து அந்த வர்த்தகக் கப்பலை அழிக்கின்றாய் எமது போராளிகளை அழிக்கின்றாய்.

அப்போது யாரால் எப்படியாக இந்த இராணுவ சமநிலை பேணப்படுகின்றது.நானும் பிரபாகரன் அவர்களும் கண்காணிப்புக் குழு ஜெனரல்மார் இரண்டு பேரையும் அழைத்து கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலமாக இந்த இராணுவ சமநிலையைப் பற்றிப் பேசினோம்.

இராணுவம் எப்படி நவீனமயமாக்கப் படுகிறது, அவர்கள் ஆட்களைச் சேர்க்கலாம் நாங்கள் ஆட்களைச் சேர்க்க முடியாது. 18 வயதுக்கு ஒரு வயது குறைந்தாலும் எம்மீது பழிபோடுவீர்கள் இராணுவம் பலப்படுத்தப்பட்டு வருகிறது. எப்படி இராணுவ சமநிலை பேணப்பட்டு வருகிறது என்று கேட்டோம்.

அப்போது அவர்கள் சொன்னார்கள் நீங்கள் சொல்வது சரி நாங்கள் இந்த பிரச்சினையை எடுத்துக் கதைக்கிறோம் என்று சொன்னார்கள்.

நான் சொன்னேன் நீங்கள் கதைக்க வேண்டாம் நீங்கள் உலக நாடுகளுக்கு சொல்லுங்கள். விடுதலைப் புலிகள் சமாதானத்தைப் பேணவேண்டும் என்ற உறுதிப்பாட்டில் தங்களைக்கூடப் பலப்படுத்தாமல் இருக்கின்றார்கள். ஆனால் நீங்கள் ஒரு அரசு என்ற ரீதியில் பெருமளவு ஆயுதங்களைக் கொண்டுவந்து குவித்து உங்களுடைய கடற்படை, விமானப்படை,

(06 ஆம் பக்கம் பார்க்க)

## எமது மக்கள்...

தரைப்படைகளைப் பலப்படுத்தி வருகின்றீர்கள். இது நியாயமா? இதை நாங்கள் எவ்வளவு காலம் பொறுத்திருப்பது. இந்த சமாதானத்தால் யார் பாதிக்கப்படுகின்றார்கள். எங்களுடைய மக்களின் பலம் பாதிக்கப்படுகிறது.

ஆயுதங்கள் எமது மக்களின் பாதுகாப்புக் கருவிகள். இந்த ஆயுதத்தை வைத்து நாங்கள் போராடி ஒரு பலம் மிக்க சக்தியாக இருப்பதாற்றான் இந்த சிங்கள தேசம் எங்களுடன் பேசுகிறது. உலகம் எங்களுக்கு அங்கீகாரம் தருகிறது.

இந்த ஆயுதம் எங்களிடம் இல்லை என்று வைத்துக் கொண்டால், எம்மிடம் இராணுவ பலம் இல்லை என்று வைத்துக் கொண்டால் இந்த பேச்சு வார்த்தை நடக்காது. ஆனாலும் இந்தப் பேச்சு வார்த்தை புலிகளை பலவீனப்படுத்தும் ஒரு பொறியாக மாறக் கூடாது. அதில் நாங்கள் குறியாக இருக்கின்றோம்.

இந்த அரசாங்கம் அமெரிக்காவுடன் உடன்பாடு செய்தது. இந்தியாவுடன் உடன்பாடு செய்தது, சர்வதேச நாடுகளுடன் உடன்பாடுகளைச் செய்தது. ஒருபுறம் வர்த்தக ஒப்பந்ததங்கள் பொருளாதார ஒப்பந்தங்கள், இராணுவ ஒப்பந்தங்களாக செய்யப்படுகிறன. .

எதற்கு? புலிகள் இயக்கத்தை சுற்றி, தமிழர் தாயகத்தை சுற்றி ஒரு பாதுகாப்பு சிலந்தி வலை போடப்பட்டிருக்கிறது. எங்களுக்கும் தெரியும். இதில் இந்தியாவின் பங்கு எவ்வளவுக்கு இருக்கிறது என்பதும் எங்களுக்கு தெரியும். அமெரிக்காவின் பங்கு எவ்வளவு இருக்கின்றது என்பதும் எமக்குத் தெரியும். நாங்கள் முட்டாள்கள் அல்ல.

ஆனால், நாங்கள் சமாதான பாதையில் உறுதியாக நிற்கிறோம் என்று உலகத்துக்கு காட்டிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த சமாதான சூழல் எத்தகைய ஒரு சிலந்தி வலையை ஒரு பொறியை உருவாக்குகிறார்கள் என்று எங்களுக்கு தெரியும். ஆதலால் நாங்கள் விழிப்பாகவும் இருக்க வேண்டும். இந்த சமாதானத்தை குலைக்கக் கூடாது. ஏனென்று சொன்னால் எமது மக்கள் அதை விரும்புகிறார்கள். எமது மக்கள் சமாதான பாதையை விரும்புகிறார்கள். அமைதியை விரும்புகிறார்கள். அமைதி வழியிலான ஒரு தீர்வை விரும்புகிறார்கள்.

நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்தி எங்களை பலப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சிங்கள பேரினவாத சக்திகள் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு எதிராக பிரச்சாரம் செய்கின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் சேர்ந்து புலிகள் தம்மை பலப்படுத்துவதாக பிரச்சாரம் செய்கின்றார்கள். நாங்கள் அப்படி எங்களைப் பலப்படுத்தவில்லை.

எங்களிடம் ஆயிரம் ஆயிரம் துப்பாக்கிகள் இருக்கின்றது. வேண்டுமானால் சிறிலங்கா அரசாங்கத்துக்கும் விற்கக்கூடிய அளவுக்கு எங்களிடம் துப்பாக்கிகள் இருக்கிறது. ஒரு யுத்த சூழ்நிலையில் சிறிலங்கா இராணுவ முகாம்களை தகர்க்க முடியும். சிறிலங்கா இராணுவ ஆயுத பலத்தை அழிக்க முடியும். அவர்களிடம் இருந்தும் இராணுவ ஆயுதங்களைப் பெறமுடியும். வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை கொண்டு வரமுடியும். கப்பல்களில் கொண்டுவந்து இறக்கி இருக்கிறோம்.

எங்களுடைய பீரங்கிப்படகுகள் நேர்முகம் கொண்டு தாக்க சிறிலங்கா கடற்படை விட்டு விட்டு ஓடியிருக்கிறது.

இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு எங்களுடைய சொந்த மண்ணில், தமிழீழ கடற்பரப்பில் எங்களுடைய நடமாட்டத்தை குறைத்து அவனுக்கு கைகட்டிப் பணிந்து அவனிடம் அடிவாங்கி எமது போராளிகளை பலிகொடுத்து பொறுமையை இழக்காமல் நிதானத்தை இழக்காமல், அமைதியாக நாங்கள் செய்யும் தியாகம் அற்புதமானது.

எங்களுக்கு பலமில்லை என்றோ, அல்லது நாங்கள் பயந்தோ அமைதியை பேணவில்லை. இந்த மக்களுக்காக, உலகத்துக்கு உண்மையை விளக்குவதற்காக நாங்கள் பொறுமையுடன் இருக்கிறோம்.

எங்கள் மீது குற்றம் சாட்டப்படுகிறது. இவர்களுக்கு அரசியல் தீர்வில் அக்கறை இல்லை. இவர்கள் தமிழீழ இலட்சியத்தை கைவிடமாட்டார்கள். இவர்கள் பேச்சுவார்த்தை என்று சொல்லி உலகத்தை ஏமாற்றிப் பார்க்கிறார்கள். என்பன போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றது.

நாங்கள் உலகமே ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கிறோம்.

என்னமாதிரி என்று சொன்னால் தலைவர் அவர்கள் கடந்த மாவீரர் தின அறிக்கையில் வரலாற்று முக்கியமான ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.

அதாவது, தமிழ் மக்கள் தமது தாயக நிலத்தில் வரலாற்று ரீதியாக காலந்தோறும் ஆண்டாண்டு வாழ்ந்த தாயக மண்ணில் சுதந்திரமாக கௌரவமாக சமாதானமாக வாழக்கூடிய ஒரு சுயாட்சி உரிமையைக் கொண்ட ஆட்சி அமைப்பை விரும்புகின்றார்.

அப்படியான ஆட்சியமைப்பு தரப்பட்டால் அதை நாம் பரிசீலனை செய்து பார்க்க தயாராக இருக்கிறோம். அதற்கும் தலைவர் சர்வதேச நியமங்கள் பிரகடனங்களை குறிப்பிட்டு உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற பதத்தைப் பாவிக்கின்றார்.

உள்ளக சுயநிர்ணய உரிமை என்றால் இறையாட்சி உள்ள ஒரு நாட்டில், ஒடுக்கப்படும் மக்கள் தங்கள் தாயக நிலத்தில் ஒரு சுயாட்சியை அமைத்துக்கொள்ளும் உரிமையாகும். உள்ளக சுயநிர்ணய உரிமையை தரமறுத்தால் நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை செய்து பிரிந்துசென்று தனியாட்சி அமைப்பதை தவிர எமக்கு வேறு வழியில்லை என்று சொல்கின்றார்.

நாங்கள் உலகத்தை ஏமாற்றுவதற்காக இந்த சொற்பதங்களையோ, சொற்சிலம்பாடல்களையோ நடத்தவில்லை. சர்வதேச உலகம் ஏற்றுக் கொள்ளக் கூடிய சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைய எமது கோரிக்கையை முன் வைக்கிறோம். இது உலகத்தால் அங்கீகரிக்கப்படுகிறது.



சிங்களத் தேசத்துக்கு பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கினோம். ஒரு நாட்டு அரசு சமஷ்டி ஆட்சி முறையில் ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும். ஆனால், நீங்கள் அதற்கும் மறுத்து ஒடுக்கு முறையை தொடங்குவீர்கள். என்று சொன்னால் நாங்கள் பிரிந்துசென்று போவதை தவிர எங்களுக்கு வேறு வழியில்லை.

ஆனால், ஒரு அரசு ஒரு மக்களை சனநாயக ரீதியில் அரவணைத்து அந்த மக்களுக்கு அரச அங்கீகாரம் வழங்கி பிரதிநிதித்துவம் வழங்கி, அவர்களை அரவணைக்கத் தவறினால் அந்த மக்கள் பிரிந்து சென்று தனி அரசை பிரகடனம் செய்யும் உரிமை உள்ளவர்கள் என்று சொல்லி ஐ.நா. சாசனத்தில் சொல்லப்படுகிறது.

ஒரு மக்கள் இனத்துக்கு சமத்துவ உரிமை மறுக்கப்பட்டு, அந்த மக்களுக்கு சனநாயக உரிமை மறுக்கப்பட்டு, அந்த மக்களுக்கு அரசாங்கத்தில் இடமில்லை என்று சொன்னால், உனக்கு அதாவது அரசுக்கு பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையோ, சுயாட்சி உரிமையோ இல்லை.

உலகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வை முன்வைக்கிறோம். அதைப்பற்றி பேசுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

சிறுவர்களை, 18 வயதுக்கு குறைந்த வர்களை நாங்கள் படையில் இணைத்துக் கொள்வதாக குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டது. முன்பு அப்படியாக சம்பவங்கள் இடம்பெற்றது. அதை மறுக்கவில்லை.

ஆனால் இப்பொழுது எமது தலைவர் ஒரு தீர்க்கமான உறுதியான முடிவை எடுத்துள்ளார். 18 வயதிற்குட்பட்ட எந்தச் சிறுவர்களையும் நாங்கள் இராணுவத்தில் சேர்த்துக்கொள்வதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

கடந்த சில மாதங்களாக 18 வயதிற்குக் குறைந்த 400 இளைஞர் யுவதிகளை நாங்கள் எங்களால் முடிந்தளவு இந்த வயது குறைந்த இளைஞர், யுவதிகளை இராணுவத்தில் சேர்ப்பதில்லை. ஆனால் அப்படிப்பட்ட இளம் பிள்ளைகள் எமது இராணுவ முகாம், அரசியல் செயலகங்களைத் தேடி வருகின்றார்கள்.

வீட்டில் வறுமைப் பிரச்சினை, சாப்பிட வழி இல்லை. சில பெற்றோரார்கள் கலைத்து விடுகின்றார்கள். இதனால் இவ்வாறான இளைஞர், யுவதிகள் வருகின்றார்கள், வந்து எங்களை இணைத்துக் கொள்ளுங்கள் என்கின்றார்கள். இவ்வாறு ஆயிரமாயிரம் சிறுவர்கள், சிறுமியர்கள் வருகின்றார்கள்

அவ்வாறு வருபவர்களில் இரண்டு வயது முதல் 12வயது வரையான சிறுவர், சிறுமியரை நாம் எடுத்து நாம் பராமரிக்கின்றோம். சிறுவர் பராமரிப்பு இல்லங்களை நாம் இவர்களுக்காகவே நடத்துகின்றோம். யாரும் வந்து இவர்க ளைப் பார்க்கமுடியும்.

இவ்வாறு, 15,20, சிறுவர் பராமரிப்பு சிறுவர் இல்லங்கள், அநாதை இல்லங்களை நாம் நடத்துகின்றோம்.

நாம் சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பதாக குற்றஞ்சாட்டும் நீங்கள், அதாவது சர்வதேச நிறுவனங்கள் வந்து இந்த சிறுவர் இல்லங்களை பார்க்க வேண்டும். நிதியுதவி செய்ய வேண்டும். முடியுமா...? உங்களிற்கு விருப்பமில்லை நீங்கள் மேலே இருந்து கொண்டு அதாவது, அவர்களிற்கு வாகனம் வேண்டும். நிர்வாக செலவிற்கு என்று பெரும் தொகை வேண்டும். ஐ.நா.வில் ஒதுக்கப்படும் நிதிகளில் முக்கால் நிர்வாகத்திற்கு போக, மீதியில் தான் ஒரு பாயும், ஒரு பீங்கானும் கொடுத்துவிட்டு எங்களுக்கு எதிராக அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்றீர்கள் எங்களுக்கு தெரியாதா உங்களைக் கலைப்பதற்கு, நாங்கள் என்ன சும்மாவா இருக்கின்றோம். இல்லை பொறுமையுடன் இருக்கின்றோம். வந்து நிலைமைகளை பார்த்து, யதார்த்த நிலைமைகளை, உண்மைகளை பார்க்கவேண்டும். நாங்கள் பிழைவிடவில்லை என்று சொல்லவே இல்லை. நாங்களும் ஆட்களைப் பிடித்துக்கொண்டு போயிருக்கிறோம். இதனால் பல தளபதிகளை விலத்த வேண்டிய நிலை வந்திருக்கின்றது. கடுமையான தண்டனைகளை வழங்கும் நிலை இருந்தது. எங்களுக்குத் தெரியாமலும் சில விளையாட்டுக்கள் நடக்கின்றது.

நாம் இயக்கத்தின் கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பதையும் பார்க்க வேண்டும். அதேநேரம் எமக்குப் போராளிகளும் தேவை. இராணுவ பலமும் தேவை. அதற்காக நாம் தொடர்ந்து எமது இயக்கத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொண்டுதான் இருப்போம்.

முக்கியமான விடயம், பேச்சுவார்த்தை நடந்து கொண்டு இருக்கின்றது. 5வது கட்டப் பேச்சுவார்த்தை முடிந்து விட்டது. இனி 6 வது கட்டத்திற்குப் போகின்றோம்.

அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிப் பேசப் போகின்றோம். அரசாங்கத்தால் முடியுமா? அடிப்படைப் பிரச்சினைகளில் ஒன்று தமிழர் தாயகம். அதாவது வடக்கும், கிழக்கும் இணைந்த தமிழர் தாயகம். அதுதான் அடிப்படை. தமிழ் பேசும் தாயகம். சரி முஸ்லிம் மக்களையும் நாம் அரவணைத்துக் கொண்டுபோவோம்.

ஆகவே வடக்கும், கிழக்கும் முஸ்லிம் மக்களின் தாயகம் தமிழ்பேசும் மக்களின் தாயகம்.

இதை உங்களால் அங்கிகரிக்கமுடியுமா... இப்பொழுதும் கொழும்பு அரசில் தெளிவான, தீர்வான அரசியல் பார்வை இல்லை. இனப்பிரச்சினையை எப்படி தீர்ப்பது எனும் தெளிவான நிலை இல்லை.

கொழும்பு அரசு எனும்போது அது இரண்டு ஆட்சி அதிகார மையங்களைக் கொண்டது. ரணில் விக்கிரமசிங்கவின் கீழான ஆட்சி. அரசிடம் பெரியளவில் அதிகாரங்கள் இல்லை. ஆனால் அவரிடம் நல்ல மனம் உண்டு. அவருடன் பீரிஸ், மிலிந்த மொறகொட எனும் அருமையான ஆட்கள் உண்டு. அவர்களுடன் பேசலாம். ஆனால் அவர்களிடம் அதிகாரம் இல்லை.

கடற்படைப் பிரச்சினையை எடுத்தால், அம்மாதான் கடற்படைக்கு கட்டளை இடுபவர். நெடுந்தீவில் என்ன நடந்தது? நாங்கள் ஜேர்மனியில் இருந்து கொண்டே பிரச்சினையைத் தீர்க்க அம்மா சொல்கின்றார். விடாதை அந்த புலிகளுடைய படகுகளை கட்டி இழுத்துக் கொண்டு போ என உத்தரவு போடப்பட்டது.

நாங்கள் கண்காணிப்புக் குழுவுடன் கதைக்க, கடற்படை இராணுவ தளபதிகளோ அம்மா சொல்வதைத்தான் கேட்கின்றார்கள். கடற்படைத் தளபதியாக இருப்பது அம்மாவின் ஆள் எப்படி இப்பிரச்சினையைத் தீர்ப்பது? ரணில் விக்கிரமசிங்க தீர்க்க முடியாது?

ஏனெனில், 200 மைல்களுக்கு அப்பால் தான்தோன்றித்தனமாக நடக்கின்றது அராஜகம். இவரால் தடுக்க முடியாது. அம்மாவால் தான் தடுத்து நிறுத்த முடியும். அம்மாவுக்கு கீழேதான் ஆயுதப்படை இருக்கின்றது. ஆகவே, கொழும்புடன் நாம் பேசுவது என்பது சரி. ஆனால், அதை அரசாங்கம் என்று சொல்ல முடியாது. அதற்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் வேறுபாடு இருக்கின்றது என்பது அரசியல் அறிந்தவர்களுக்குத் தெரியும்.

சட்டவாக்க அதிகாரம் பெற்ற அரச அலகுடன் பேசுவது நிர்வாக அதிகாரம் கொண்ட அரசு அங்கு உள்ளது. அப்படி என்றால் நாம் எவ்வளவு தூரம் போவது? கனதூரம் ஓட முடியாது?

அதாவது தமிழ் மக்களுக்கு தமக்கு சுயாட்சி கொடுக்கக் கூடிய ஒரு புதிய அரசியல் யாப்பை இந்த அரசாங்கத்தால் கொண்டுவர முடியுமா..? முடியாது.

ஏனெனில் நீங்கள் அங்கு பெரும்பான்மையே அல்ல. அதுதான் முஸ்லிம் என்று தொங்கிப் பிடித்து கொண்டு இருக்கின்றார்கள். எங்கள் தமிழன் இல்லாது விட்டால் அரசாங்கமே சரி. அந்த நிலையிலும், ஒரு புதிய யாப்பை கொண்டு வந்து தமிழ் மக்களின் நீதியான, நியாயமான கோரிக்கைகளை முன்வைக்க முடியாது.

ஆனால், நாங்கள் தொடர்ந்து கேட்போம். தொடர்ந்து வாதாடுவோம். இது நடக்கும். உலகத்தால் அங்கிகரிக்கப்படக்கூடிய கோரிக்கையை நாங்கள் முன் வைத்துக் கேட்போம். அம்மாவும் விடமாட்டார். அவாவுக்கு இன்னும் 02 வருடம் இருக்கிறது. இந்த 02 வருடத்தினுள் அம்மா ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடப்போகின்றார். அம்மா லேசான ஆள் இல்லை.

நேற்று கொழும்பில் ஒரு இலட்சம் மக்கள் திரண்டு எழுந்தது சமாதானத்திற்கு எதிராக, புலிகளுக்கு அதிகாரம் கொடுப்பதற்கு எதிராக என ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். ஆனால், புலிகளுக்கு ஒரு அதிகாரமும் வரவில்லை. கடந்த ஒரு வருடமாக எமக்கு ஒரு நன்மையும் கிடைத்திருக்கின்றது. அது பொருளாதாரத் தடை நீக்கப்பட்டுள்ளது.

என்றாலும், 10 இலட்சம் இடம் பெயர்ந்த மக்கள் தமது கிராமங்களில் குடியேற முடியாத அவலநிலை தான் இருக்கின்றது.

ஏனெனில், இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் என்று இடங்களை விலத்தி விலகத் தயாராக இல்லை. ஏன்.... அம்மா விடமாட்டார். இராணுவம் விலக விரும்பினாலும், அம்மா போகாதே என்று மறித்து விடுவார்.

இதனால், எமது மக்கள் தமது கிராமத்திற்கு, பாடசாலைக்கு, கோயிலுக்கு போக முடியாமல் இருக்கின்றார்கள். இந்த போர் நிறுத்தம் செய்யப்பட்டு ஒரு வருடம் ஆகியும் இந்த நிலை மாறவில்லை.

நாங்களும், இராணுவம் போகும், போகும் என்று எதிர்பார்க்கின்றோம். நாங்களும் எங்களால் முடிந்தளவு இழுத்துப் பார்த்து விட்டோம் உலகத்திற்கும் சொல்லிப் பார்த்து விட்டோம். அதாவது, அகதியான, இடம்பெயர்ந்த மக்கள் தமது கிராமத்திற்கு, தமது தாயகத்திற்கு தமது வீடுகளுக்குப் போக வேண்டும் என்பது - இது ஐ.நா. சபையில் கூறப்பட்ட ஒரு அடிப்படை உரிமை.

ஆனால், இந்த உரிமையும் மறுக்கப்படுகின்றது.

கடைசியாக நம்பியார் என்பவரிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டுள்ளார்கள். நம்பியாரின் அறிக்கையை நாமும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். எமக்கு முன்பு ஒரு நம்பியாரைத் தெரியும். வில்லன் நம்பியார். ஆனால், இவரும் இவ்வாறு வில்லன் விளையாட்டு விடுகின்றாரா என்று பாரப்போம். இவ்வளவு நெருக்கடிகள் மத்தியில், எவ்வளவு ஆத்திர மூட்டும் செயல்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளுக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தவுள்ள கூட்டு

பிரதான எதிர்க்கட்சிகளான பொதுசன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி.யும் இணைந்து கொழும்பில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிரான பேரணியொன்றை நேற்று நடத்தி முடித்திருக்கின்றன. இதனை பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் நடவடிக்கைகள் விலைவாசி ஏற்றத்துக்கு எதிரான போராட்டம் என்று கூறுகின்றது. ஜே.வி.பி. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு எதிரான போராட்டம் என்கின்றது. எவ்வாறாயினும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான போக்கைக் கொண்ட இவ்விருகட்சிகளும் இணைந்து அடுத்த தேர்தலில் ஒரு கூட்டை ஏற்படுத்துவதற்கான கால்கோலிடலாகவே இதனைக் கருதலாம்.

இதற்கான பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் பூர்த்தியடைந்து உயர் மட்டத்தில் கூட்டு உறுதிப்பட்டு விட்டதாகவே தெரிகின்றது. இந்தப் பேரணி நடைபெற்ற பின் கூட்டு ஒப்பந்தம் - அதாவது, புரிந்துணர்வு ஒப்பந்தம் - பெரும்பாலும் கைச்சாத்தாகவே வாய்ப்புத் தெரிகிறது.

இவ்வாறான நிலையில், தமது கூட்டின் பலத்தை அரசாங்கத்துக்கு வெளிப்படுத்தவும் தத்தமது பலத்தைச் சோதித்துப் பார்க்கவும் இக்கட்சிகள் இணைந்து இப்பேரணியை நடத்தியிருக்கின்றன.

10 லட்சம் பேரை கொழும்பில் கொண்டு வந்து குவிக்க ஜே.வி.பி. திட்டமிட்டிருந்தது. ஆயினும், இரண்டு லட்சம் வரையான மக்களே இப்பேரணியில் கலந்து கொண்டிருக்கின்றனர். எனினும், இவ் ஊர்வலம் கணிசமானோரின் பங்களிப்புடன் நடந்தேறியிருப்பது உண்மையே.

அதேவேளை, இந்தப் பேரணி மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும், பேரணியை சாட்டாக வைத்து கொழும்பில் பாரிய கலவரமொன்றை ஏற்படுத்த சதித் திட்டம் தீட்டப்பட்டதாகவும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரித்திருந்தார். அதிலும் குறிப்பாக, தமிழர்கள் மீதும், தமிழ் வர்த்தகர்கள் மீதும் வன்முறைகள் தூண்டிவிடப்படலாம் என அவர் கூறியிருந்தார்.

ஆனால், பேரணியானது குறிப்பிடத்தக்க பிரச்சினைகள் எதுவுமின்றி நடந்து முடிந்திருக்கின்றது.

சமாதான நடவடிக்கைகளைக் குழப்ப முயன்றுவரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொழும்பில் தமிழர் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என விடுத்த எச்சரிக்கையானது மிகவும் பாரதூரமான விடயமாகும். அதாவது, லட்சக்கணக்கான மக்களை ஒன்று திரட்டி பெரிய பேரணியொன்றுக்கு ஏற்பாடு செய்திருந்த கட்சிகள் இவ்வாறு விடுத்த எச்சரிக்கை அச்சத்துக்குரியதொன்றாகும். திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சதி முயற்சி ஒவ்வொன்றும் பெரும் கலவரத்தைத் தூண்டவல்லவையாகும்.

பல்வேறு வழிகளிலும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கையிலேயே ஜே.வி.பி.யும், பொ.ஐ.மு.வும் ஈடுபட்டிருக்கின்றன. இம்முயற்சிகள் இன்னமும் அவற்றுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கவில்லை. இக்கட்சிகளின் ஆதரவாளர்கள் இந்தச் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக கோஷமிடவே அழைக்கப்பட்ட நிலையில், சிறியதொரு சீண்டல் முயற்சி அல்லது தூண்டிவிடல் கூட பெரும் வன்முறையாக வெடிக்க வழிகோலக்கூடியதாகும். இந் நிலையில், சந்திரிகா அம்மையாரின் எச்சரிக்கை கூட கலவரத்தைத் தூண்டிவிடக் கூடியதாகும்.

உண்மையிலேயே, அவ்வாறான ஒரு சூழல் காணப்படுமானால், கலவரச் சூழல் உண்டென சனாதிபதி சந்திரிகாவினால் உணரப்படுமானால் அல்லது அறியப்படுமானால் இப்பேரணியை நடத்தாது தவிர்த்திருக்க வேண்டும் அல்லதுவிடின் தாக்குதல் நடத்தப்படாது பாதுகாக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள படைகள் மூலம் முயற்சி செய்திருக்க வேண்டும். ஆனால், கலவரங்கள் ஏற்படும் என்பதும், தமிழ் வர்த்தகர்கள் தாக்கப்படலாம் என எச்சரிப்பதும் கலவரங்களைத் தூண்டுவது மட்டுமல்ல யார் மீது தாக்குதல் நடத்தப்பட வேண்டுமென கோடி காட்டுவது போன்றதுமாகும். எவ்வாறாயினும் நேற்றைய பேரணி வன்முறைகள் எதுவுமின்றி முடிவடைந்திருப்பதும் கொழும்பில் வாழும் தமிழ் மக்களுக்கு நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது.

**வேலவன்**

இது ஒரு புறமிருக்க கூட்டுச் சேரும் நிலையிலுள்ள பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி யும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு காலக்கெடு விதித்து வருகின்றன. ஆகக் கூடியது மூன்று மாதங்களுக்குள் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியிலிருந்து தூக்கி எறியப்படும் என்பது அவர்கள் இறுதியாக வழங்கிய காலக் கெடுவாகும். அதேவேளை சரியான சந்தர்ப்பம் வரும் போது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தூக்கி எறியப்படும் என்றும் அச் சந்தர்ப்பம் எவ்வேளையிலும் ஏற்படலாம் என்றும் பொ.ஐ.மு வின் பேச்சாளர் சரத் அமுனுகம கூறியிருக்கிறார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் கைக்கு வரப் பெற்றும் சனாதிபதி சந்திரிகாவினால் அதனை உடனடியாகப் பிரயோகிக்க முடியவில்லை. இதற்கு பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தல் ஒன்றை நடத்தினால் தாம் வெற்றி பெறுவோமா? என்ற சந்தேகம் எழுந்ததே காரணமாகும். தற்போது ஏற்படக் கூடிய கூட்டானது தேர்தல் வெற்றி குறித்த நம்பிக்கையை இக்கட்சிகளுக்கு ஏற்படுத்தியிருக்கக் கூடும். எனினும் சமாதான முயற்சிகள் தளம்பலின்றிச் சென்று கொண்டிருக்குமானால் அவ்வாறான முயற்சி ஒன்றில் ஈடுபடும் அரசாங்கத்தைக் கலைப்பதை சர்வதேச சமூகம் விரும்பும் என்ற அச்சமும் பாராளுமன்றம் கலைக்கப்படாமைக்கு தொடர்ந்தும் காரணமாக அமையலாம்.

எனவே தாம் நினைத்ததைச் சாதிப்பதற்கு பொதுசன ஐக்கிய முன்னணிக்கு இன்றுள்ள முக்கிய தேவையாக தம்மீது பழிவிழாது சமாதான முயற்சிகளைக் குழப்ப வேண்டிய தேவையுள்ளது. இதற்கு அது ஜே.வி.பியை மட்டுமல்ல ஐக்கிய தேசிய முன்னணியையும் பயன்படுத்தக் கூடும்.

ஜே.வி.பி யானது சமாதான முயற்சி கள் தொடர்வதையிட்டு மிகுந்த ஆத்திரம் கொண்டிருக்கிறது. சமாதான முயற்சிகளுக்கு எதிராக எதனையும் செய்ய அது தயாராக இருக்கிறது. ஆனால் அதற்குத் தேவையான பலம் அதனிடம் இல்லாத நிலையில் அதிகாரத்தைக் கொண்டுள்ள பொ.ஐ. முயையும் சனாதிபதி சந்திரிகாவையும் பயன்படுத்தும் முயற்சியிலேயே அது இறங்கியுள்ளது. புதிய கூட்டின் மூலம் அது சாத்தியமாகும் சந்தர்ப்பமும் காணப்படுகிறது.

எவ்வாறாயினும் பல்வேறு சோதனைகளையும் நெருக்கடிகளையும் தாண்டி நிலை பெற்றிருக்கும் சமாதான முயற்சிகளுக்கு மேலும் நெருக்கடி ஏற்படும் வாய்ப்புக்களையே ஜே.வி.பி. - பொ.ஐ.மு. கூட்டும் நேற்றைய பேரணி குறித்து அக்கட்சிகள் கொண்டிருக்கும் பெருமிதமும் உருவாக்கவுள்ளமை வெளிப்படையாகும். இதனை முறியடிப்பது சமாதான முயற்சிகளின் எதிர் காலத்தை மட்டுமல்ல ரணில் விக்கிரமசிங்க அரசின் எதிர்காலத்தையும் தீர்மானிக்க வல்லதாகும்.

எனவே, சமாதான முயற்சிகளுக்கு ஏற்படும் நெருக்கடிகள் குறித்த விடயத்தில் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டத்தில் அரசாங்கம் உள்ளது என்றே கூறவேண்டும்.

# இந்திய மீனவர் ஊடுருவலின் பின்னணியில் இராஜதந்திரச் சதி முயற்சி

இந்திய-இலங்கை மீனவர்களுக்கிடையில் கடந்த வாரம் இடம்பெற்ற சர்ச்சை கைகலப்பாக மாறி பலர் காயமடையும் நிலை ஏற்பட்டது. தமிழரின் விடுதலைப் போராட்டம் சர்வதேச மயப்பட்டு தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை - அரசியல் இறைமையை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள முற்பட்டுள்ள வேளையில் தொப்புள் கொடி உறவைக் கொண்டுள்ள தமிழகத் தமிழர்களுடன் நிரந்தரப் பகை உணர்வை ஏற்படுத்தக் கூடியதொரு முக்கியமான சம்பவங்களாகும்.

கடந்தவாரம் திங்கட்கிழமை இரவு பேசாலைக் கடலில் அத்துமீறி இலங்கை கடற்பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு இலங்கை மீனவர்களின் வலைகளை நாசமாக்கிய 75 தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கு மிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதில் 17இற்கும் அதிகமான இந்திய மீனவர்களும் நான்கு இலங்கை மீனவர்களும் காயமடைய நேரிட்டது. இதனையடுத்து 75 இந்திய மீனவர்களும் அவர்களது 23படகுகளும் மன்னார் கரைக்கு கொண்டு வரப்பட்டன.

இதனைத்தொடர்ந்து அடுத்த நாளான செவ்வாய்க் கிழமையும் இவ்வாறான சம்பவம் ஒன்று தலைமன்னார் கடற்பகுதியில் இடம் பெற்றது. இதில் 42 இந்திய மீனவர்களை அவர்களது படகுகளுடன் மன்னார் கரைக்கு இலங்கை மீனவர்களால் கொண்டுவரப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் மன்னார் மீனவர் சங்க சமாசத்தினூடாக பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிசார் தமது விசாரணைகளை முடித்து மன்னார் நீதிமன்றில் முற்படுத்தினர் இதற்கு முன்னர் காயமடைந்த 17 இந்திய மீனவர்களும் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இவர்களில் நூற்றி ஐந்து பேரைப் பாதுகாப்பு அமைச்ச ஊடாக தமிழகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் 12படகோட்டிகளை வரும் 20 ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்குமாறும் மன்னார் நீதிபதி உத்தரவிட்டார். இதற்கமைய நூற்றி ஐந்து இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் இந்திய கடலோரக் காவல்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச் சம்பவமானது இந்திய அரசியல்களத்திலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி இச்சம்பவம் குறித்து தான் அதிர்ச்சி அடைந்துள்ளதாகக் கூறியுள்ளார். "கச்சதீவை இலங்கை அரசிடம் காங்கிரஸ் கட்சி ஒப்படைத்தது தவறு அதை மீளப்பெற இந்திய மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன் மூலம் கச்சதீவில் இந்திய மீனவர்கள் பாதுகாப்பாக மீன்பிடித்தலை உறுதி செய்யமுடியும்" என தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

**கெல்மன்**

இது மட்டுமல்ல இந்திய மத்திய அமைச்சரவையிலும் இந்த விவகாரம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது அத்தோடு இந்த மீனவர்விவகாரம் தமிழகத்தில் இலங்கைத்தமிழர் தங்கியுள்ள மண்டபம் அகதிமுகாம் சுற்றாடலிலும் எதிரொலித்துள்ளது. கும்பல் ஒன்று மண்டபம் அகதிமுகாம் மீது தாக்குதல் நடத்த முயற்சி மேற்கொண்டது. இந்த முயற்சி தமிழக காவல் துறையினரால் தடுக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் வளத்தை பயன் படுத்திவருவது இன்று நேற்று நடந்துவரும் சம்பவம் அல்ல. நீண்ட காலமாகவே நடைபெற்று வருகிறது. முறைப்பாடுகளும் தொடர்ந்தவண்ணமுள்ளது. இதனால் இலங்கை மீனவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகி வரும் நிலைமையும் தொடர்கிறது. அதிலும் இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் இழுவைப்படகுகளால் இலங்கை மீனவர்களின் வலைகள் இழுத்துச் செல்லப்பட்டு நாசமாக்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்ல இழுவைப்படகுகளின் மடி கடலின் தரைப்பகுதியுடன் ஒட்டிய வகையில் இழுக்கப்படுவதால் அப்பகுதியிலுள்ள கடற் பாசி, கூனான் போன்றன அழிக்கப்படுகின்றன. இது மீனினம் உற்பத்தியாவதை தடுத்து வருகிறது. இது கடல் வளத்தையும் குன்றச் செய்து விடுகிறது. இதை ஒரு நீண்ட கால பாதிப்பாகவே கொள்ள வேண்டும். இந்திய இழுவைப் படகுகளின் தொந்தரவுகள் குறித்து அண்மையில் யாழ்.குடா நாட்டு மீனவர்களும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு முறையிட்டிருந்தனர். இலங்கையின் வடபகுதி கடற்பிராந்தியத்திலேயே இந்திய மீனவர்களின் தொல்லை அதிகமாகக் காணப்படுகிறது.

இந்த இரு நாட்டு மீனவர்களுக்கிடையிலான பிணக்கைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு இந்திய- இலங்கை அரசுகளுக்கு உண்டு. இந்த அடிப்படையிலே இந்த விவகாரம் கையாளப்படாது கண்டும் காணாமலும் விடப்பட்டு இரு நாட்டு மீனவர்களுக்குமிடையில் மோதல் உருவாகும் அளவிற்கு வளர்விட்டுள்ளதில் அரசியல் இராஜதந்திர பின்னணி உண்டு என்றே எண்ண வைக்கிறது.

இலங்கைத் தமிழர் சிங்கள ஆட்சியாளரின் அடக்கு முறையிலிருந்து மீள நடத்தப்படும், விடுதலைப் போராட்

(9ஆம் பக்கம் பார்க்க)

# கட்டாய குடும்பக் கட்டுப்பாட்டைத் தடுக்க

# மலையக இளைய சமுதாயம் முன்வர அழைப்பு

### பாடசாலைகளும் மூடப்படும் அபாயம்!

(கண்டி)

**மலையகத் தோட்டப் புறங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டாயக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட நடவடிக்கைகளை மலையக தோட்டப் புற இளைஞர்,யுவதிகள் கூட்டுச் சேர்ந்து கட்டுப்படுத்த முன்வர வேண்டும். இல்லையேல் இன்னும் ஓரிரு வருடங்களில் மலையகத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் மூடவேண்டி வரும் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.சிவஞானம் அண்மையில் இரத்தோட்டை மவுசாகல,மிட்லேண்ட் தோட்டங்களில் அத்தோட்ட இளைஞர் யுவதிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,கடந்த காலங்களில்மலையகத் தோட்டப் புறங்களில் மேற்கொள்ளப்பட்ட கருத்தடைசெயற்பாடுகள் காரணமாக தற்போதே பெரும்பாலான தோட்டப்புறப் பாடசாலைகளை மூட வேண்டியுள்ளது.

இங்குள்ள மவுசாகல தமிழ் பாடசாலையில் இவ்வருடம் எட்டு மாணவர்கள் மட்டுமே ஆரம்ப வகுப்புக்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

இன்று மலையகத் தோட்டப் புறங்களில் இவ்வாறான நிலையைப் பெரும்பாலான பாடசாலைகளில் காண முடிகின்றது.

இவ்வருடம் மத்திய மாகாணத்தில் மாணவர்கள் குறைவாகவுள்ள கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் என இனம் காணப்பட்டு சுமார் 150 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக அறிகிறேன். இவற்றில் பெருமளவு மலையகத் தோட்டப்புற தமிழ் பாடசாலைகளே உள்ளடங்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, தோட்டப் புறங்களில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொழிலாளர்களின் அறியாமையைப் பயன்படுத்தி நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொண்டு வரும் கருத்தடைச் செயற்பாடுகளை அத்தோட்ட இளைஞர், யுவதிகள் கூட்டுச் சேர்ந்து தடுத்து நிறுத்த வேண்டும். தோட்டத்திற்குள் காலடி எடுத்து வைக்க முன்பே அவர்களை விரட்டியடிக்க வேண்டும் என்றார்.

# உடையார்கட்டுப் பகுதியில் தளிர்சேமிப்புக் கணக்கு

அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தளிர் சேமிப்புக் கணக்கு உடையார்கட்டியில் கடந்த 5ஆம் திகதி கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளையினால் அறிமுகம் செய்து ஆரம்பிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வானது முற்பகல் 11.00 மணியளவில் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 200 வரையான மாணவர்களுக்கு கணக்கினை மேற்கொண்டனர். தொடர்ந்து முல்லை மாவட்ட தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனமும், கிராமிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து மாணவர் களிடையே பசுந்தளிர் விவசாய அறிவியல் போட்டியை நடாத்தியது. போட்டியில் தெரிவு செய்யப்பட்ட க. யோகராசா, த. தர்மநாத், சி. கோபிகிருஸ்ணன் ஆகிய மூன்று மாணவர்களுக்கும் கிராமிய அபிவிருத்தி வங்கியினால் தளிர் சேமிப்புக் கணக்கு வைப்பு செய்யப்பட்டு, சேமிப்புப் புத்தகம் கையளிக் கப்பட்டதோடு, நிகழ்வில் கணக் கினை ஆரம்பித்த பயனாளிகளுக்கு தலா ஒரு தென்னை நாற்று வீதம் இலவசமாக வழங்கப்பட்டன என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

# கற்பிட்டிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

கற்பிட்டிக் கடற்பரப்பில் மீன்பிடிக்க முயன்ற பல இந்திய கடற்றொழிலாளர்கள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பத்து இழுவைப் படகுகளும் கற்பிட்டி கடற்படை முகாமில் நங்கூரம் இடப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# திலீபன் மருத்துவ சேவை செயற்பாட்டு அறிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் கடந்த 16-05-2002 ஆரம்பிக்கப்பட்ட தியாகி திலீபன் மருத்துவ சேவையினர் இது வரை ஆற்றி வந்த மருத்துவ சேவைகள் பற்றிய அறிக்கையினை வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுவினர் வெளியிட் டுள்ளனர்.

அவ்வறிக்கையில், சாதாரண மலேரியாவுக்கு 2500 பேர், மூளை மலேரியா 70 பேர், வைரஸ் காய்ச்சல் 1900 பேர், பாம்புக்கடி 25 பேர், விபத்துக் காயங்கள் 933 பேர்,மிதிவெடியில் சிக்கிக்காயம் 5பேர், மகப்பேறு 06 பேர், வயிற்றோட்டம் 650 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட மருத்துவ சேவைகள் அனைத்தும் மருத்துவ மனையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், மருத்துவ மனையிலிருந்து பத்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மாமுனை, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளிலும் நடமாடும் சேவையாகவும் ஆற்றப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (11)

# மீள்குடியேறிய மக்களுக்கு போசாக்குப் பயிற்சி நெறி

(முல்லைத்தீவு)

முல்லை. வட்டுவாகல் கிராம அலுவலர் அலுவலகத்தில் கடந்த 3,4,5ஆம் திகதிகளில் உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் மீள்குடியேற்ற கிராமமான முள்ளிவாய்க்கால் கிழக்கு,செல்வபுரம் ஆகிய கிராம மக்களுக்கான போசாக்குத் தொடர்பான பயிற்சி நெறி கச்சேரிஉதவித் திட்டப்பணிப்பாளர், தலைமையில் ஆரம்பமானது.

பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், து. வி.ஜெயக்குலராஜா கரைதுறைப் பற்று உதவி அரசாங்க அதிபர் காசிப்பிள்ளை, கச்சேரி திட்டப்பணிப்பாளர் முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர், செல்வபுரம் கிராம அலுவலர், பொது சுகாதார பரிசோதகர் க. ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு விரி வுரைகளை நிகழ்த்தினார்கள். பயிற்சியாளர்களாக இரு கிராமங்களில் மக்கள் கலந்து கொண்டு கருத் துரைகளைப் பெற்றுக்கொண்டனர். (20)


2003.03.14ஆம் நாள் முதல்...
பளை நகரிலும்
தன் பணி தொடங்குகின்றது

தமிழீழ வைப்பகம்

உங்கள் வளமான வாழ்விற்கான
பல்வேறுபட்ட
மேம்பட்ட சேவைகளுடன்

உங்கள்
நம்பிக்கையின்
சின்னம்

உங்கள் அருகில் உங்கள் தெரிவில்
உங்களிற்காகவே
தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்



**சிந்தனைக்கு**

சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழ்த்திய வடுக்கள் என்றுமே மாறப் போவதில்லை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 12-03-2003


## அமைதியைக் குலைக்க....!

சர்வதேசக் கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் சிறிலங்கா கடற்படையினரால் வழி மறிக்கப்பட்டு தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. இது யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மட்டுமல்ல, சர்வதேசச் சட்டங்களுக்கும் மாறான செயலாகும்.

விடுதலைப் புலிகளின் கப்பலானது சர்வதேசக் கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்தது என்பதை சிறிலங்கா கடற்படையே ஊர்ஜிதம் செய்திருந்தது. இந்நிலையில், அக்கப்பலைத் தாக்கி அழிக்க உத்தரவிட்டமையானது தெரிந்துகொண்டே செயற்பட்ட நடவடிக்கையாகும். ஆகையினால், இத்தாக்குதல் என்பது சமாதான முயற்சிகளுக்கு எதிராக - அதாவது, சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை என்பதில் சந்தேகப்பட எதுவுமில்லை.

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலை இடைமறித்த சிறிலங்கா கடற்படை முதலில் அக்கப்பலை இலங்கையின் கடற்பரப்பிற்குள் கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், இது பயனளிக்கவில்லை. இந்நிலையில், கப்பல் மீது தாக்குதலை மேற்கொண்டு மூழ்கடித்துள்ளது.

இக்கப்பலைச் சிறிலங்கா கடற்படையினர் தம் இஷ்டத்திற்கு இலங்கையின் கடற்பரப்பிற்குள்ளோ அன்றித் திருமலை துறைமுகத்திற்கோ கொண்டு வந்திருப்பின் இவ்விவகாரத்தைத் தமது இஷ்டத்திற்கு ஏற்ப சிறிலங்கா கடற்படை கையாள முடிந்திருக்கும். எடுத்துக் காட்டாக, புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கிட்டு அவர்கள் பயணம் செய்த கப்பலை சர்வதேசக் கடற்பரப்பில் வழி மறித்த இந்திய கடற்படை அதனைத் தமது கடற்பரப்பிற்குள் கொண்டுவந்த பின்னரே நடவடிக்கை மேற்கொள்ள முனைந்ததைச் சுட்டிக்காட்ட முடியும்.

ஆனால், தற்பொழுது விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் மாலுமிகள் இதற்கு அனுமதிக்க மறுத்த நிலையில், சர்வதேச கடற்பரப்பில் வைத்தே தாக்குதல் நடாத்தி சிறிலங்கா கடற்படை விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பலை மூழ்கடித்துள்ளது.

கடற்படையின் இந்நடவடிக்கையானது சிறிலங்கா அரசாங்கம் சமாதான முயற்சிகள் குறித்து கொண்டுள்ள நிலைப்பாடு அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கக் கூடியதாகும். அதாவது, யுத்த நிறுத்த உடன்பாட்டையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் சிறிலங்கா அரசாங்கம் தன்னையும், தனது ஆயுதப்படைகளையும் பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதாகச் சந்தேகிக்க வைக்கிறது. அவ்வாறு இல்லாதுவிடில், அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கும், சமாதான சூழ்நிலைக்கும் பாதகம் விளைவிக்கும் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துதல் அவசியம் அதுதான் பொறுப்பும் ஆகும்.

இதேவேளை, இக்கப்பல் தொடர்பான விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாது போய்விட்டது என பின்னர் வெளியாகியுள்ள தகவல்கள் சில தெரிவிக்கின்றன. அதாவது, சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பின் பெயரிலேயே இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாக சனாதிபதி தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

ஆகையினால், சமாதான முயற்சிகளுக்கு ஊறுவிளைவிக்கும் நோக்கில் இத்தாக்குதல் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பின் பெயரில் மேற்கொள்ளப்பட்டது என்பது ஊர்ஜிதப்படுகின்றது. இந்நிலையில், எழும் முக்கியமானதொரு கேள்வி யுத்த நிறுத்த உடன்பாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் பாதுகாக்க முடியுமா என்பதே ஆகும்.

ஏனெனில், சிறிலங்கா கடற்படை கூறிய யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறுவது இது முதற்தடவையல்ல, ஆரம்பம் முதலே யுத்த நிறுத்த உடன்பாட்டை ஆயுதப் படையினர் மீறி வருகின்றனர். இவ்வாறு கடற்படையானது செய்வதற்கு கடற்படைத் தளபதிக்கும் - சிறிலங்கா சனாதிபதிக்கும் இடையிலான நெருக்கமான உறவே காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சனாதிபதியின் நோக்கமானது எவ்வாறேனும் விடுதலைப் புலிகளுக்கு சீற்றத்தை ஏற்படுத்தி அதன் மூலம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் முறித்துக் கொள்வதற்கான சூழ்நிலை உருவாக்குதலே ஆகும். இதற்கானதொரு ஏற்பாடாக அமைந்ததே விடுதலைப் புலிகளின் கப்பல் மீதான தாக்குதல் ஆகும்.

இந்த ரீதியில் பார்ப்பின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் சிறிலங்கா அரசு என்ற ரீதியில் இனப்பிரச்சினை விவகாரத்தை ஒருமுகப்படுத்தப்பட்ட ரீதியில் கொள்ள முடியாது உள்ளது என்பதே இன்றுள்ள யதார்த்த நிலையாகும். ஆனால் இதற்காக தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் சிறிலங்கா ஆயுதப்படைகளின் அராஜகத்தையும், அத்துமீறல்களையும் எந்தளவிற்குப் பொறுத்துக் கொள்ள முடியும் என்பது கேள்விக்குரிய தொன்றே, ஏனெனில் பொறுமைக்கும் எல்லை இருக்கத்தானே செய்யும்?

## ஜே.வி.பி - பொ.ஐ.முன்னணி கூட்டிணைவு நாட்டை பேரழிவுக்கு இட்டுச் செல்லும்

### அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியுடன் ஜே.வி.பி.கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைத்து நாட்டை மீண்டும் பேரழிவில் ஆழ்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், ஜே.வி.பி.யினர் நேர்மையற்ற விதத்தில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து மீண்டும் இந்த நாட்டைக் குழப்பி அதில் பயனடையப் பார்க்கின்றனர். பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் இதனைப் பலமாக வலியுறுத்துகின்றன.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைக் குழப்பி மீண்டும் யுத்தமொன்றை உருவாக்கி வங்கிகளை உடைக்க ஜே.வி.பி. முயல்கிறது என்றும் அவர் கூறினார்.

## தப்பியோடிய படையினரை நீக்கும் நடவடிக்கைக்கு விமான, கடற்படை எதிர்ப்பு

(கொழும்பு)

முப்படைகளிலுமிருந்து தப்பியோடிய அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட படையினரை சேவைப் பட்டியலிலிருந்து நீக்கும் யோசனைக்கு விமானப்படையும், கடற்படையும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்தத் திட்டத்தால், தத்தமது படைகளில் மிகச் சிறப்புப் பயிற்சி பெற்ற வீரர்கள் படையணிகளை விட்டு வெளியேறும் அபாய நிலைமை தோன்றியுள்ளதாக விமானப்படை மற்றும் கடற்படைத் தளபதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பல வருடங்களில் முப்படைகளிலுமிருந்து 60,000 க்கும் மேற்பட்ட படையினர் தப்பிச் சென்றுள்ளனர். இவர்கள் மீண்டும் தத்தமது படையணிகளில் இணையப் பல தடவைகள் பொது, மன்னிப்பு வழங்கப்பட்டும், இவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் எதுவும் வெற்றியளிக்கவில்லை.

இதனால் முப்படைகளிலும் தப்பியோடியோரை சேவைப்பட்டியலிலிருந்து நீக்குவதென முடிவெடுக்கப்பட்டு இதற்காக பாராளுமன்றத் தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலுக்கேற்ப அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இராணுவம் தயாராகவுள்ளது.

எனினும் விமானப்படையும், கடற்படையும் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்தத் திட்டத்தால் தாங்கள் மிகச் சிறந்த பயிற்சி பெற்ற வீரர்களை இழக்க வேண்டிய நிலை ஏற்படுமென இரு தளபதிகளும் தெரிவித்துள் ளனர்.

விமானப்படையிலிருந்து 3000 பேரும், கடற்படையிலிருந்து 500 பேரும் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அரசாங்கத்தைக் கவிழ்க்க இடமளிக்கப் போவதில்லை!

### அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க

(கொழும்பு)

சனாதிபதி அரசாங்கத்தைக் கலைப்பதற்கு முயற்சி செய்வாரானால் அதற்குத் தாம் எந்த வகையிலும் இடமளிக்கப்போவதில்லை என்று அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் சனாதிபதிக் கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைக்க நான் தயங்கப் போவதில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கண்டாவளைக் கோட்ட மெய்வன்மைப் போட்டியில் 13 மாணவர்கள் மாவட்ட போட்டிக்குத் தெரிவு

கண்டாவளைக் கோட்ட பாடசாலை மாணவர்களின் மெய்வன்மைப் போட்டி விழா கடந்த சனியன்று கிளி/தருமபுரம் ம.வி. மைதானத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி. சிற்றம்பலம் தலைமையில் பி.ப. 1.30 மணிக்கு ஆரம்பமாகியது. இப்போட்டியில் 21 பாடசாலைகள் பங்குபற்றின.

மங்கல விளக்கை கிளி/வலயக்கல்வி பணிப்பாளர் ப. அரியரட்ணமும், [illegible]க் கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதனும் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சந்திரி ஏற்றினார். கோட்டக் கொடியை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏற்ற தொடர்ந்து பாடசாலைக் கொடிகளை பாடசாலை முதல்வர்கள் ஏற்றினர். அடுத்து விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்று இறுதியாக வெற்றிபெற்ற வீரர் களுக்குச் பரிசில்களும் சான்றிதழ்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன.

இப் போட்டியின் முடிவில் 13 மாணவர்கள் முதன்மை வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

1) 11 வயது பிரிவு :-உ.றசிதரன், கிளி/நாகேந்திரா வித்தியாலயம்,வ.ஜனனி கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம்

2) 13 வயது பிரிவு :- யோ.யூட் சுஜீபன் கிளி/தருமபுரம் ம.வி, செ.சயந்தினி கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க வித்தியாலயம்

3) 15 வயதுப் பிரிவு :- வி.சதீஸ், ஜெகௌதமி கிளி/தருமபுரம் ம.வி

4)17 வயது பிரிவு :- சி.துஷ்யந்தன், தி.கௌசல்யா கிளி/தருமபுரம் ம.வி

19 வயது பிரிவு :- செ.அஜித்குமார், ஞா.கோகீசன் கிளி/தருமபுரம் ம.வி. இ.அருந்தவமலர் கிளி/கண்டாவளை ம.வி

21 வயது பிரிவு:- ஆ.கமலரூபன் கிளி/முருகானந்தா ம.வி, கு.அருமைராசா கிளி/தருமபுரம் ம.வி. க.சுபாஜினி கிளி/பிரமந்தனாறு ம.வி

(14)

## இந்திய...

டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டிய தார்மீக கடப்பாடு தமிழகத்திலுள்ள ஆறு கோடி தமிழர்களுக்கு இருக்கிறது. இதைக் கூர்மையடையவிடாது மழுங்கடிக்கவோ அன்றி இதைத் தடுக்கும் நடவடிக்கையாகவோ இந்த இரு நாட்டு மீனவர் விவகாரத்தைக் கொள்ளமுடியும்.

தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையில் வரலாற்றுப்பகை உணர்வை ஏற்படுத்தி இலங்கைத் தமிழர் ஆதரவுப் போக்கை நிறுத்த சிறிலங்காவில் ஒருசாரார் முயற்சிக்கின்றனர். அவர்கள் போட்ட திட்டத்தின் பாற்பட்டதே இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறும் தமிழக மீனவர்களைக் கட்டுப்படுத்தாது கண்டும் காணாமல் இருக்கும் சிங்களக் கடற்படையின் நடவடிக்கையாகும்.

இவ்வாறான திரைமறைவு வேலைகளை புரிந்து கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். சில சர்வதேச ஒலி, ஒளி பரப்பு நிறுவனங்களும் மோதலுக்கு ஊக்கம் கொடுப்பதைப் போல் செய்திகளை வெளியிடுவதோடு இதற்கு ஒரு அரசியல் வடிவம் கொடுக்கவும் முற்படுகின்றன. இது அவற்றின் அபிலாசையின் வெளிப்பாடாகவே கொள்ளவேண்டும்.தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவுக் குரல்கள் ஓங்கி ஒலிக்கும் வேளையில், விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலம் சிறைவாசம் அனுபவிக்குமளவில் தமிழக தலைவர்கள் தியாகங்களைச் செய்யும் வேளையில் மீனவர்களுக்கிடையிலான சர்ச்சைகள் ஏற்படாவண்ணம் இரு நாட்டு மீனவர்கள், மீனவ சங்கங்கள் நிதானத்தைக் கடைப்பிடித்தல் அவசியமானதாகும்.

இலங்கை இந்திய மீனவர்கள் அவற்றின் அமைப்புக்கள் இதை புரிந்து கொள்ளவேண்டிய கட்டாயம் இன்றுள்ளது.

ஏனெனில் இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு பல சக்திகள் கங்கணம் கட்டி நிற்கின்றன.

இரு நாட்டு மீனவர்களுக்குமிடையில் மோதல் உருவாகக் கூடிய சூழலை ஏற்படுத்தி அந்த மோதல் மூலம் தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையில் நீண்ட பகை உணர்வை வளர்த்து இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தமிழக மக்கள் வழங்கும் தார்மீக ஆதரவை இல்லாது செய்து போராட்டத்தை மழுங்கடிக்க போடப்பட்ட திட்டமே இது. இலங்கை கடற்பகுதிக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறும் நடவடிக்கையை சிறிலங்கா கடற்படை கண்டும் காணாமல் இருப்பதும் அல்லது கட்டுப்படுத்த முற்படாததும் திட்டமிடப்பட்ட இராஜதந்திர நடவடிக்கையின் பாற்பட்டதே என்பதில் தவறேதும் இருக்க முடியாது.

# மன்னார் மாவட்டத்தில் சிரான் அமைப்புக் கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிரான் அமைப்பின் மாவட்டக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

சிரான் அமைப்பின் பணிப்பாளர் செல்வின் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் அரச தரப்பில் மன்னார் அரச அதிபரும், திட்டப் பணிப்பாளரும், விடுதலைப் புலிகளின் தரப்பில் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் அமிர்தாப் ஆகியோர் பங்கு கொண்டனர். (மி)

## வீரவணக்கம்...

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்தவராவார்.

* வீரவேங்கை நிதன் (கணபதிப்பிள்ளை தியாகராஜ், காக்காச்சி வெட்டை, மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்துள்ளார்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## அவுஸ்திரேலியா அணி 96 ஓட்டங்களால் நியூசிலாந்து அணியைத் தோற்கடித்தது

உலகக் கோப்பை 'சுப்பர் சிக்ஸ்'போட்டியில் நேற்று அவுஸ்திரேலிய நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய அணி 96 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஒன்பது விக்கற் இழப்பிதற்கு 208 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

## தமிழீழ...

அடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தின பெயர் பலகையினை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்தார். அதனையடுத்து நீதிமன்ற கட்டடத்தினை அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் தலைமையில் பிரத்தியேகமாக அமைக்கப்பெற்ற மேடையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமையுரையினையடுத்து அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சமகால அரசியல் நிலை குறித்து உரை நிகழ்த்தினார். அடுத்து நன்றியுரையினை தமிழீழ நீதிமன்ற பிரதம நீதியரசர் ஒப்பிலான் நிகழ்த்தினார்.

நிகழ்வில் திருமதி. அடேல் பாலசிங்கம், யாழ். மாவட்டத்திலிருந்து வருகைதந்த நீதியாளர்கள், சட்டவாளர்கள், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார், சிவாஜிலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன், வன்னி மாவட்ட தமிழ்க் காங்கிரஸ்கட்சி அமைப்பாளர் செந்தில்நாதன், கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம், துறைசார் நிறுவன பொறுப்பதிகாரிகள், பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். (பா, சோ)

## கப்பல்....

சம்பவம் தரையிலிருந்து 240 மைல்களுக்கு அப்பால் நடந்ததாகக் கூறியது பின்னர் அவர்கள் 220மைல்கள் என்றனர். பின்னர் 185 கடல்மைல்களுக்கப்பால் நடந்ததாக எழுத்து பூர்வமான அறிக்கை ஒன்றை அனுப்பினார்கள்.

சிறிலங்காவின் பொருளாதார கடற்பரப்பு என்பது கடற்கரைக் கப்பால் 200 மைல்கள் தூரம் வரைதான். இந்த எல்லைக்குள் நடந்திருந்தால் சிறிலங்கா கடற்படையின் நடவடிக்கை சட்டப்படி சரியானது தானா என்று தீர்மானிக்கும் விடயத்தில் அது கொஞ்சம் தாக்கம் செலுத்தும். ஆனால் இது மட்டுமே ஒரே விடயமல்ல மற்றுமொரு விடயம். புலிகளின் கப்பல் ஏதாவது தேசியக் கொடியுடன் வந்ததா என்பது. அது ஏதாவது கொடியுடன் வந்திருந்தால் புலிகள் சட்டரீதியாக சற்று மேம்பட்ட நிலையிலிருப்பார்கள். மற்றொரு விடயம் இந்த கப்பல் என்ன கொண்டுவந்தது எங்கிருந்து புறப்பட்டு வந்தது எங்கு அது சென்றுகொண்டிருந்தது என்பது பற்றிய விபரங்களையும் புலிகளிடம் கேட்போம். அது ஆயுதங்களை எடுத்து வந்து கொண்டிருந்தால். இலங்கைக்கு வந்துகொண்டிருந்தால் அது நிச்சயமாக போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பாற்பட்டதாக இருக்காது. அதேபோல அந்தளவு அதிகபட்ச பலத்தைப் பிரயோகித்து அந்த கப்பல் மீது கடற்படை தாக்குதல் நடத்தியதும் போர்நிறுத்த ஒப்பந்த சாரத்தை ஒத்ததல்ல என்று போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் கூறியுள்ளார்.

எமக்கு கவலையளிக்கும் விடயம் என்னவென்றால் புலிகளின் கப்பலை மறித்தவுடன் சிறிலங்கா கடற்படையினர் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு தகவல் தந்து எங்களது கண்காணிப்பாளர்களை தங்களது கப்பலுக்கு அழைத்து நிலமையை கண்காணிக்குமாறு கோரவில்லை என்பதுதான். இது பற்றி நாம் பாதுகாப்பு அமைச்சகத்திலும் ஏற்கனவே பேசியுள்ளோம் கடற்படை தலைமையுடனும் பேசுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வர்த்தக...

இது சர்வதேச கடல் 220 கடல் மைல்களுக்கு அப்பால் நடந்த ஒரு சம்பவம். சர்வதேச கடற்பரப்பில் வர்த்தக நோக்கத்துடன் சென்ற ஒரு வர்த்தகக்கப்பல் தடுத்து வைக்கப்பட்டு அழிக்கப்பட்டது. பாரதூரமான விடயம். இதில் எமது போராளிகள் மரணத்தைத் தழுவிக்கொள்ள நேர்ந்ததும் ஒரு பாரதூரமான விடயம்.

இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்ந்தால் இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நிலவும் சுமுகமான நிலை மற்றும் பரஸ்பர நம்பிக்கையூட்டும் நிலை பாதிப்படையும்.

கடலில் இடம்பெற்ற சம்பவத்தை கண்காணிப்பு குழுவாலோ, சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சராலோ தடுத்து நிறுத்த முடியாமல் போய்விட்டது. சிறிலங்கா சனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் கடற்படை உள்ளது. சிறிலங்கா சனாதிபதியிடம் இந்த அதிகாரம் இருக்கும் வரைக்கும் இப்படியான சம்பவங்கள் நிகழும் என்ற ஒரு அச்சம் எங்களுக்கு இருக்கின்றது.

ஆகவே இதனால் பேச்சுவார்த்தைகளின் சுமுகமான பரஸ்பர நம்பிக்கையூட்டும் நிலைமை பாதிப்படையும்.

பேச்சுவார்த்தைகள் ஒவ்வொரு மாதமும் இடம்பெற்று வருகிறது. இதேவேளை உபகுழுக்களின் பேச்சுக்கள் வாரத்துக்கு அல்லது மாதத்திற்கு இரண்டு தடவைகள் நடைபெறுகிறது. பேச்சுவார்த்தைகள் பல மட்டங்களில் பல பரிமாணங்களில் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது.

சில சமயங்களில் பேச்சுவார்த்தைக்கு முன்பாகவும், பேச்சுவார்த்தை நடைபெறும் போதும் அல்லது அதற்குப் பின்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. ஆகவே பேச்சுவார்த்தையை பாதிக்கும் நோக்கத்துடன் சில சமயங்களில் இப்படியான சம்பவங்கள் திட்டமிட்டுச் செய்யப்படலாம்.

அடுத்தகட்டப் பேச்சுக்களின் போது அரசாங்கத்திடம் இருந்தும் சில உறுதிப்பாடுகளை கேட்போம். ஏனென்றால் அரசாங்கத்தைவிட கண்காணிப்புக் குழுதான் இந்த உறுதிப்பாட்டைத்தர வேண்டும்.

மேற்கொண்டு இவ்வாறான சம்பவங்கள் நிகழக்கூடாது. யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களை கண்காணிப்புக் குழுதான் முழுமையாக பொறுப்பேற்று நீதி வழங்க வேண்டும். இரண்டு தரப்பும் கண்காணிப்புக் குழுவின் அதிகாரத்துக்கு கீழ் நீதியான தீர்வுக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

சிறிலங்கா கடற்படை யுத்த நிறுத்தத்தை மீறி அதிகாரம் செய்வதாயின் போர்நிறுத்த உடன்பாடும் தேவையில்லை, கண்காணிப்புக் குழுவும் தேவையில்லை.

போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் ஒவ்வொரு சம்பவமும் தமிழ் மக்கள் சமாதானத்தில் வைத்திருந்த நம்பிக்கையை குலைத்துக் கொண்டே வருகின்றது. ஆனால் அதேவேளை எங்களுடைய மக்களுக்கு நம்பிக்கை குலைந்து போனாலும், சமாதானம் தொடர்ந்து கடைப் பிடிக்க வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றார். மக்கள் புலிகள் யுத்தத்துக்கு போக வேண்டும். பதில் தாக்குதல் நடத்த வேண்டும் என்று மக்கள் தற்போது விரும்பவில்லை. மக்கள் எங்களை எவ்வளவுக்கு பொறுமையாக இருந்து இந்த சமாதான முயற்சியை தொடரும் படிதான் மக்கள் விரும்புகின்றனர்.

எங்களுடைய மக்களுக்காகத்தான் நாங்கள் சமாதானத்தை பேணுகின்றோம். ஒரு சில சம்பவத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு யுத்தத்தை தொடங்குவதில் அர்த்தம் இல்லை. சமாதானத்தால் பெறும் நலன்கள் தான் முக்கியமானது.

இனிமேற்கொண்டு ஒரு யுத்தம் வந்தால் மீண்டும் சமாதானத்தைக் கொண்டு வருவது என்பது சங்கடமான விடயம்.

அடுத்தது ரணில் விக்கிரமசிங்கவின் இந்த அரசுதான் தமிழ் மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று இருக்கின்றது. இந்த அரசு கலைக்கப்பட்டால் அல்லது வேறு ஒரு தலைமை வந்தால் சமாதான வழி மூலம் தீர்வு காண்பதற்கான எதிர்காலமே இல்லை.

போர் நிறுத்தம் செய்யப்பட்டு ஒரு வருடமாகியுள்ளது. இதில் எத்தனையோ சவால்கள், எத்தனையோ பிரச்சினைகள், எத்தனையோ ஆத்திரமூட்டும் செயல்களுக்கும் மத்தியிலும் போர்நிறுத்தம் பேணப்பட்டுத்தான் வருகின்றது.

விடுதலைப்புலிகள் இது வரை பாரிய யுத்த நிறுத்த மீறல்கள் எதிலும் ஈடுபடவில்லை.

இதுவரை ஐந்து சுற்று பேச்சுக்களே இடம்பெறுள்ளன. இதில் பாரிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளது.

ஐம்பது வருடகால போராட்டத்தில் கடந்த ஐந்து மாதத்தில் இடம்பெற்ற பேச்சுக்களில் முக்கியமான திருப்பமாக புலிகள் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் அரசியல் தீர்வை பரிசீலனை செய்ய தயாராக இருப்பது, இதன் படிப்படையில் சில முக்கிமான குழுக்களை அமைத்து, அரசியல் விவகார குழுக்களை அமைத்து சமஷ்டி ஆட்சி முறை பற்றி ஆராயப்படுகின்றது.

இயல்பு நிலையை உருவாக்குவதற்கு தடையாக இருப்பது ஆயுதப்படை சமாதானம் தோன்றி இருக்கின்றது. ஆனால், இயல்பு நிலை தோன்றவில்லை. ஆயுதப்படையை இறுக்கமாக வைத்திருப்பது சனாதிபதி சில படைப் பிரிவுகள் ரணில் பேச்சை கேட்டாலும் கடற்படை முழுமையாக சனாதிபதியின் கட்டுபாட்டிலேயே உள்ளது.

யுத்த நிறுத்தத்தை நிலையானதாக வைத்திருக்கவும் சமாதான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து நடத்தவும் இயல்பு நிலை அத்தியாவசியமானது.

அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டால் சமாதானத்தை விரும்பு பவர்கள் ஆட்சிக்கு வந்தால் நாங்கள் அவர்களுடன் பேசத் தயாராக இருக்கின்றோம். ஆனால், புலிகளுக்கு எதிரான சமாதானத்திற்கு முரண்பட்டவர்கள் உதாரணமாக ஜே.வி.பி. போன்ற சக்திகள் ஆட்சிக்கு வந்தால் சமாதானத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பது கடினமாக இருக்கும்.

தேர்தல் இடம்பெற்றாலே, அல்லது ஒரு ஆட்சி மாற்றம் வந்தாலும் போர்நிறுத்தத்தை நாங்கள் கைவிடமாட்டோம். போர் நிறுத்தத்தை இறுக்க கடைப் பிடித்து ஆட்சிக்கு வருபவர்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்கின்றார் என்று பார்ப்போம். அவர்கள் போர்தான் வழி என்று நினைத்து போரை தொடங்கினால் நாங்கள் தவிர்க்கமுடியாது. போருக்கு செல்வதை தவிர வேறு வழியில்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல்கைதிகளை விடுவிக்குமாறு எடுத்துக் கூறி உள்ளோம். அமைச்சர் மிலிந்த மொறகொட அவர்கள் விடயத்தில் அக்கறை கொண்டுள்ளார்.

இவர்களின் விடுதலைக்கு இந்நாட்டின் சனாதிபதி தடையாக உள்ளார். இவ்விடயத்தில் தமிழ் அரசியல் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் அழுத்தங்களை கொடுக்கவேண்டும். அப்படி இல்லாது விட்டால் இக்கைதிகளை தமிழ் பகுதிகளுக்கு மாற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## எமது மக்கள்...

மத்தியில், எவ்வளவு ஆபத்தான கட்டங்களின் மத்தியில் நாம் இந்த சமாதான முயற்சிகளை மேற்கொள்கின்றோம் என்பதைத் தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்.

குறிப்பாக யாழ்ப்பாணப் புத்திஜீவிகளான நீங்கள், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த நீங்கள்தான் புரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் அங்கிருந்துதான் கூடுதலாக விமர்சனம் வருகின்றது. நாங்கள் அங்கு வரமுடியாது. நாங்கள் வருத்தத்துடன் இரவல் கிட்னியைப் பொருத்திக் கொண்டு உலகமெல்லாம் திரிகின்றோம். எப்போது விழுந்து சாவமோ தெரியாது. அப்படியான நிலைமை இந்தக் காலத்தில் மலேரியா தொற்றினால் நான் சரி (இறந்து விடுவேன்) அப்படி இருந்தும் வருகின்றோம். எதற்காக பதவி எடுக்கவா, பட்டம் எடுக்கவா, வருகின்றோம் எமக்குப் பட்டம் பதவி இல்லையோ. ஏன் வருகின்றோம் உங்கள் நலனுக்கு, எமது மக்களுக்கு சமாதானத் தீர்வு வேண்டும்.எமது மக்கள் கடந்த 50 வருடங்களாக ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுதும் பலத்தோடு நின்று எமது நியாயமான கோரிக்கையை முன்வைத்து அரசாங்கத்துடன் பேசமுனைகின்றோம்.

ஆனால் இப்பொழுதும் எங்களுக்கு சாதகமான சூழ்நிலை இல்லை. தமிழ் மக்கள் எல்லோரும் புலிகளுக்குப் பின்னே அணிதிரண்டு ஒரே இயக்கமாக ஒரே தலைமைத்துவத்தை ஏற்று இருக்கும் சூழ்நிலை 50 ஆண்டுகளின் பின்புதான் பிறந்திருக்கிறது.

தமிழ் இனம் ஒன்றுபட்டு ஒரே சக்தியாக இருக்கின்றோம். அந்த சிங்கள தேசம் முரண்பட்டு, அரசே இரண்டுபட்டு இருக்கின்றது. எங்களில் பழியைப்போட வேண்டாம்.

நேற்று நடந்த சம்பவத்தை வைத்தே நாங்கள் பெரிதாக யுத்தம் தொடங்கி இருக்க வேண்டும். ஆனால், தொடங்கப் போவதில்லை. ஏன்... உங்களிற்காக இந்த அமைதியைத் தொலைக்கமாட்டோம்.

அமைதியைக் காக்க, அமைதியைப்பேண எங்களால் முடிந்தளவு நாங்கள் பொறுமையை பேணுவோம். ஆனால், பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கின்றது குட்டக் குட்ட குனி கின்றவனும் மடையன் என்பார்கள்.

நாங்களும் நிலை மைகளை பொறுமையுடன் இருக்கின்றோம். உலகத்திற்கு எமது நிலைமைகளை விளங்க வைக்க வேண்டும்.

சிங்கள தேசம் கடுமையான பிரச்சாரம் செய்கின்றது. நேற்று நடந்ததை ஆயுதக் கடத்தல் என்று எம்மீது பழியைப் போடுகின்றது.

சரி, ஆயுதத்தை கடத்துகின்றோம் என்றால், நீங்கள் கொண்டு வரவில்லையா ஆயுதம்? என்ன கேட்கிறீர்கள் சண்டையைத் துவங்கு. உன்னுடைய ஆயுதத்தை அடித்துப் பறிக்கின்றோம் என்றா தொடங்குவது.

செய்யலாம். எங்களுக்கும் சுகம். பேச்சுவார்த்தைதான் யுத்தத்தைவிடக் கஷ்ரம். நான் தலைவர் பிரபாகரனிடம் நேற்று கேட்டேன் எனக்கு ஒரு ஓய்வைத்தா. உன்னுடன் 25 வருடமாக இழுபடுகின்றன். என்று. அதற்கு தலைவர் கூறினார். புலிகள் இயக்கத்தில் இருப்பவர்களுக்கு ஓய்வு என்றால் மரணம் தான் என்று. அத்துடன் நான் வாயை மூடிக்கொண்டு வந்துவிட்டேன்.

நான் புலிகளின் தலைமைப்பீடக் கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளேன். இந்த அமைதியை பேணி, சமாதான வழி மூலம் எமது மக்களுக்கு ஒரு நிம்மதியான, கெளரவமான தீர்வை பெறுவதற்கு முன்னின்று உழைப்போம் என்று கூறி எனது பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.